செப்ரம்பர் 2014 September | இதழ் 284 ISSUE

# தமிழர் தகவல்
# TAMILS' INFORMATION













24 வது ஆண்டில் th Year

Growing with the Community ESTD-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து **From the Editor**

தமிழர் தகவல் TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
ரஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

# அக்டோபர் 30

இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை நியமித்த சர்வதேச சுயாதீன விசாரணைக் குழு தனது பணிகளை ஆரம்பித்துள்ளது.

இலங்கைக்குள் சென்று இக்குழு விசாரணை நடத்த அனுமதிக்கப் போவதில்லை என்ற நிலையில் இலங்கை அரசு பிடிவாதமாக உள்ளது.

இலங்கைக்குச் செல்லாமலே தங்களால் முழுமையான விசாரணையை நடத்த முடியுமென மனித உரிமைகள் பேரவை பதிலளித்துள்ளது.

விசாரணையை முன்னெடுப்பதற்குத் தேவையான ஆதாரங்களும் ஆவணங்களும் முறைப்பாடுகளும் சாட்சியங்களும் ஜெனிவா வசம் ஏற்கனவே கிடைத்துள்ளன என்பதை இந்த அறிவித்தல் ஊடாக அறிய முடிகின்றது.

ஆயினும், இன்னமும் அவர்களைச் சென்றடையாத பல விடயங்கள் பாதிக்கப்பட்ட மக்களிடமும் அவர்களின் உறவினர்களிடமும் உள்ளன. அவைகளைப் பெறுவதற்கான காலக்கெடுவாக அக்டோபர் முப்பதாம் திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய இனஅழிப்பு இலங்கையில் நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். இப்பொழுதும் இது தொடர்ந்து கொண்டிருக்கிறது.

2002 பெப்ரவரி 21ம் திகதிக்கும் 2011ம் ஆண்டு நவம்பர் 15ம் திகதி வரை இடம்பெற்ற குற்றச்செயல்களை இந்தக் குழு விசாரிக்கும் ஆணையைக் கொண்டுள்ளது. இந்தப் பத்தாண்டுகள் என்பது யுத்தத்தின் முக்கியமான காலகட்டம்.

முள்ளிவாய்க்காலில் முடிவுற்ற யுத்தத்தின்போது சுமார் எழுபதாயிரம் மக்கள் கொல்லப்பட்டிருக்கலாமென்று ஐ. நா அறிக்கையொன்று கூறுகிறது. ஆனால் இங்கு 1,46,679 பேர் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது காணாமற்போகச் செய்யப்பட்டுள்ளனர் என்று மன்னார் ஆயர் புள்ளி விபரங்களுடன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தீவில் இடம்பெற்ற குற்றச்செயல்களுக்குப் பொறுப்பானவர் - களைக் கண்டுபிடித்துத் தண்டிக்கவும், இனப்படுகொலையின் சூத்திரதாரிகளை அதற்குரிய மன்றில் நிறுத்தவும் சர்வதேச மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற முதலாவது விசாரணை இதுவென்பதை நாம் நினைவிற்கொண்டு செயற்பட வேண்டும்.

இந்த விசாரணைக்குழு உருவாக்கத்துக்கு முழுமூச்சாக நின்று போராடிய மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை கடந்த மாதம் 31ம் திகதி தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இவரது பணி ஓய்வுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வொன்றை தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கடந்த மாதம் ஜெனிவாவில் நடத்தின. இதில் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பதினைந்து தமிழர்களும் கலந்து கொண்டனர்.

அவர்கள் மத்தியில் நவநீதம் பிள்ளை உரையாற்றுகையில், ஜெனிவா விசாரணைக் குழுவுக்கு தமிழர்கள் போதிய சாட்சியங்களை வழங்கி அதன் இலக்கை அடைய உதவ வேண்டும் என்று வேண்டியுள்ளார்.

இந்தப் பொறுப்பின் பெரும்பகுதி புகலிடத் தமிழரைச் சார்ந்தது என்று கூறினால் அது தவறாகாது.

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல் TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல் TAMILS' INFORMATION

## 24வது ஆண்டு மலர் தயாரிப்புப் பணி ஆரம்பம்; உங்கள் ஆக்கங்களை இப்போது அனுப்பலாம்

கடந்த 284 மாதங்களாகக் கனடாவில் மாதந்தவறாது வெளிவருகின்ற 'தமிழர் தகவல்', எதிர்வரும் ஜனவரி மாதத்தில் தனது 24வது ஆண்டினைப் பூர்த்தி செய்யவுள்ளது என்பதை எமது அபிமான வாசகர்களுக்கும் வணிகத்துறை ஆதரவாளர்களுக்கும் எழுத்தாள அன்பர்களுக்கும் மகிழ்ச்சி கலந்த பெருமையுடன் அறியத் தருகின்றோம்.

கனடியத் தமிழரின் அடையாளமாக மிளிர்கின்ற 'தமிழர் தகவல்', இந்த மண்ணின் மூத்த இதழியலாகவும், சர்வதேச ரீதியாக வசிப்பவர்களின் எழுத்துகளையும் நிகழ்வுகளையும் பதிவு செய்து வரும் தனித்துவ இதழாகவும் துறைசார் வல்லுனரால் மதிக்கப்படுகிறது.

புலம்பெயர் மண்ணில் 'அறிஞர்களையும் கலைஞர்களையும் வாழும்போதே சிறப்பித்து மதிப்பளிப்போம்' என்பதை ஒரு முன்னுதாரணமாக ஆரம்பித்து வைத்த பெருமையும் தமிழர் தகவலுக்கே உரியது.

ஒவ்வொரு ஆண்டின் பூர்த்தியையும் முன்னிட்டு நடைபெறும் விழாவில் பல்துறைசார் பிரமுகர்களுக்கு விருது வழங்கி, தங்கப் பதக்கம் சூட்டுவதோடு ஒட்டியதாக தமிழர் தகவல் ஆண்டு மலரும் வெளியிடப்படுவது வழக்கம்.

இந்த வரிசையில், 24வது ஆண்டு பூர்த்தி மலர் எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் வெளிவரவுள்ளது. முன்னைய ஆண்டுகளைப்போல சுமார் 160 பக்கங்களில் வெளிவரும் மலரில் ஆக்க இலக்கியங்களைத் தவிர, தகவல்சார் கட்டுரைகள் இடம்பெறும்.

ஆங்கிலம் அல்லது தமிழில் எழுதப்படும் கட்டுரைகளை எதிர்வரும் நவம்பர் 14ம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

மின்னஞ்சல்: tamilsinfo@sympatico.ca

தபால்: P.O.Box - 3, Station - F
Toronto, ON.
M4Y 2L4

## கனடிய பிரஜாவுரிமைச் சட்டம்: விரைவில் எதிர்பார்க்கப்படும் பாரிய மாற்றங்களும் விளைவுகளும்

# Ottawa urged to remove citizenship by birth on Canadian soil

Canadian Immigration officials have recommended that Ottawa remove citizenship rights to babies born in Canada to non-citizens and non-residents even though the small number of cases doesn't justify the costs. This proposal marked 'secret' and with inputs from various federal departments.

கனடியப் பிரஜாவுரிமை இல்லாத பெற்றோருக்குக் கனடிய மண்ணில் பிறக்கும் குழந்தைகளுக்கு, கனடியப் பிரஜை என்னும் அந்தஸ்தை வழங்கும் தற்போதைய நடைமுறையை மாற்றியமைப்பதற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் பிரஜாவுரிமை பெறாத பெற்றோர்களுக்கும், கனடாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கும் கனடிய மண்ணில் பிறக்கும் பிள்ளைகளுக்கு கனடியப் பிரஜாவுரிமையை வழங்கும் நடைமுறையை ரத்துச் செய்வதே இதன் முக்கிய நோக்கமாகும்.

The Conservative government overhauled the Canadian Citizenship Act earlier this year by further restricting eligibility. However, the 'birth on soil' provision was left intact and required further details. 'Eliminating birth on soil in order to ensure that everyone who obtains citizenship at birth has a strong connection to Canada would have significant cost complications' said the 17 page report prepared for Minister of Citizenship and Immigration. The office of the ministry confirmed that the government is still reviewing citizenship policy with regard to the issue of 'birth tourism'.


கனடிய மத்திய அரசின் பல்வேறு திணைக்களங்களையும் சார்ந்த அதிகாரிகள் பலர் சேர்ந்து இதற்கான ஆவணமொன்றைத் தயாரித்து குடிவரவு பிரஜாவுரிமை அமைச்சரின் கவனத்துக்குச் சமர்ப்பித்துள்ளனர். பதினேழு பக்கங்களைக் கொண்ட இந்த 'இரகசிய' ஆவணம் தற்போது அரசின் தீவிர பரிசீலனையிலுள்ளது. பெரும்பாலும் இது நடைமுறைக்கு வரும் சாத்தியமுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கனடிய குடிவரவு பிரஜாவுரிமை அமைச்சர் கிறிஷ் அலெக்சாந்தர் இவ்வருட ஆரம்பத்தில் முற்றிலும் புதிய பல அம்சங்களைக் கொண்ட பிரஜாவுரிமைச் சட்டமொன்றைத் தயாரித்து நாடாளுமன்ற அங்கீகாரம் பெற்றிருந்தார். கனடாவில் நிரந்தரக் குடியுரிமை (Permanent Resident) அந்தஸ்துப் பெற்ற ஒருவர் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிப்பதற்கான குடியிருப்புக் கால நீடிப்பு, ஆங்கிலம் அல்லது பிரெஞ்ச் மொழியிலான கட்டாயப் புலமை, மொழிப் பரீட்சைக்கான வயதெல்லை அதிகரிப்பு போன்ற பல இறுக்கமான அம்சங்கள் இதில் அடங்கியுள்ளது.

ஆனால் இப்புதிய சட்ட விதிகள் அடுத்த வருட நடுப்பகுதியிலேயே நடைமுறைக்கு வருமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆதலால், தற்போதைய நடைமுறைக்கு ஏற்ப பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள் தமக்கான விண்ணப்பங்களைப் புதிய நடைமுறை அமுலுக்கு வருவதற்கு முன்னர் அனுப்ப முடியும்.

இந்தப் புதிய சட்ட விதிகளுக்கு மேலதிகமாக, கனடியரல்லாத பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகளின் பிரஜாவுரிமையை மறுக்கும் சட்டத்தைத் தயாரிக்கும் ஆரம்ப வேலைகள் முன்னெடுக்கப்படலாமென்று தெரியவந்துள்ளது.

கனடாவில் பிறக்கும் ஒரு குழந்தை பிறப்பினால் கனடியப் பிரஜாவுரிமையைப் பெறுகின்றது. இதனால் வெளிநாட்டுப் பெண்கள் பலர் கர்ப்பிணிகளாக இருக்கையில் கனடாவுக்கு வருகை தந்து இங்கு பிரசவத்தை மேற்கொள்வதால் அப்பிள்ளை 18 வயதைத் தாண்டிய பின்னர் தங்கள் பெற்றோரை ஸ்பொன்சர் செய்து அவர்களைக் கனடாவுக்கு அழைக்கும் தகுதி பெறுகின்றது. இதனை ஒரு துஷ்பிரயோகமாக கனடிய அதிகாரிகள் கருதுவதே புதிய சட்டத்தை உருவாக்க ஏதுவாகின்றது.●



செல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

வாகனம் செலுத்தும்போது குறுஞ்செய்தி (textimg) அனுப்பும் சாரதிகளுக்கான தண்டப் பணத்தை ஆயிரம் டாலர்களாக அதிகரிக்கும் சட்ட மூலத்தை மீண்டும் ஒன்ராறியோ சட்ட சபையில் சமர்ப்பிக்க மாகாண அரசு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. ஏற்கனவே இச்சட்டமூலம் சட்ட சபையில் சமர்ப்பிக்கப்பட்டதாயினும், கடந்த ஜுலையில் சபை புதிய தேர்தலுக்காகக் கலைக்கப்பட்டதுடன் அது காலவதியானது. அடுத்த மாதத்தில் இச்சட்ட மூலம் சபையில் மீண்டும் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிகின்றது.

உலகின் மிகச் சிறந்த நூறு பல்கலைக் கழகங்களில் கனடாவின் நான்கு பல்கலைக் கழகங்கள் தெரிவாகியுள்ளன. இவற்றுள் ரொறன்ரோ பல்கலைக் கழகமும் ஒன்றாகும். மக்மாஸ்டர் பல்கலைக் கழகம், மக்கில் பல்கலைக் கழகம், பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக் கழகம் ஆகியவை மற்றைய மூன்றுமாகும். கல்வித் தராதரம், நவீன கட்டிட அமைப்பு, கண்கவர் இயற்கை வனப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இந்த மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரொறன்ரோவின் பழமையான மின் விநியோக கட்டமைப்பை முழுமையாக மாற்றியமைக்க ஆலோசிக்கப்படுகின்றது. அடிக்கடி ஏற்படும் மோசமான காலநிலையால் பாதிப்பு ஏற்படாமல் தடுக்கவும், அதிகரித்து வருகின்ற மின்பாவனையை நிறைவு செய்யவும் மின்விநியோக அமைப்புகளைச் சீரமைக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. 400 பில்லியன் டாலரில் முன்னெடுக்கப்படும் இப்பாரிய பணியை நிறைவுசெய்ய ஐந்து ஆண்டுகள் பிடிக்குமென 'ரொறன்ரோ ஹைட்றோ' தெரிவித்துள்ளது.

கனடா முழுவதற்குமான புதிய தபால் விநியோக முறையை தபாற் திணைக்களம் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது. இதனடிப்படையில், சமூகக் குடியிருப்புகளில் பொதுவான தபாற் பெட்டிகளில் தபால்கள் விநியோகிக்கப்படும். ஆயினும், உடல் நலமில்லாதவர்களும், நடமாட முடியாதவர்களும் உரிய மருத்துவச் சான்றிதழுடன் கனடிய தபாற் திணைக்களத்திற்கு விண்ணப்பித்தால் அவர்களுக்கு நேரடியாக வீட்டுக்கு தபால் விநியோகிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் சராசரிக் குடும்பமொன்று தனது குடும்ப வருமானத்தில் 41.8 வீதத்தை கடந்தாண்டில் வரியாகச் செலுத்தியுள்ளது. இது, அவர்களின் ஆடை, உணவுப் பொருட்கள், இருப்பிடக் கட்டணம் ஆகியவைகளுக்காகச் செலுத்தும் பணத்துக்கு அப்பாற்பட்டதாகும். வன்கூவரிலுள்ள பிரேசர் நிறுவனம் தயாரித்த அறிக்கையொன்றின்படி, 1961ம் ஆண்டில் ஒருவரது வருடாந்த வருமானத்தில் சுமார் 33.3 வீதமே வரியாகச் செலுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் வண்டிகளைப் போன்ற வடிவத்திலான நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டி புதிய 'ஸ்றீட்கார்களை' ரொறன்ரோ போக்குவரத்துச் சபை அறிமுகப்படுத்த ஆரம்பித்துள்ளது. குளிரூட்டிகள், சக்கர நற்காலிகள் ஓடுபாதைகள், மேலதிகமான கதவுகள், மேலதிகமான மணியடிக்கும் பட்டன்கள், துவிச்சக்கர வண்டிகளை மேலதிகமாக இணைக்கும் வசதிகள் உட்பட பல புதிய அம்சங்கள் இந்த வண்டிகளில் உள்ளன. பயணிகள் ஏறி இறங்குவதை வேகமாகவும் இலகுவாகவும் மேற்கொள்ளும் வசதிகள் இதிலுள்ளது குறிப்பிடத்தக்கது.

அதிக இறப்புகளை விளைவிக்கக்கூடிய 'மெலநொமா' என்னும் தோல் புற்றுநோய் பற்றி எச்சரிக்கப்பட்டுள்ளது. சுமார் முப்பது நிமிடங்களுக்கு மேலாகச் சூரிய வெப்பத்தில் நிற்பவர்கள் இந்த நோயினால் பாதிக்கப்படுகின்றனர். இயலுமானவரை தலையில் தொப்பி அணிதல், கறுப்புக் கண்ணாடி போடுதல், உதட்டுத் தைலம் பாவித்தல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டால் ஓரளவுக்கு தோல் புற்று நோயின் தாக்கம் ஏற்படாமல் தடுத்துக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# நிறைவான பாராட்டுகளில் இதுவும் ஒன்று

பலவகை நோய்களுக்கும் ஆளாகிய போதிலும் மனவலிமையுடன் வாழ்ந்து மற்றவர்களுக்கு முன்னோடியாகத் திகழும் மூத்தவரான பத்மநாதன் கனகராஜா அவர்களுடனான நேர்காணலொன்று 'தமிழர் தகவல்' ஜுலை இதழில் வெளியானது. சமூகத்தில் பலராலும் நன்கு அறியப்பட்டவரான தன்னார்வச் சேவையாளர் திரு. கதிர் துரைசிங்கம் இதனை எழுதியிருந்தார். இக்கட்டுரையைப் பாராட்டிப் பலர் தொலைபேசி வாயிலாக-வும் கடித மூலமும் நேரிலும் எமக்குக் கருத்துத் தெரிவித்திருந்தனர. எமது வாசக அன்பர் ஒருவர் கடிதத்தில் தாம் தெரிவித்த பாராட்டை தகவலில் தவறாது பிரசுரிக்கு-மாறு கேட்டுக்கொண்டமைக்கிணங்க அதனை இங்கு பிரசுரம் செய்கிறோம்:

"திரு. பத்மநாதன் கனகராஜா அவர்களுடன் கண்ட நேர்காணல் பலரது கண்களைத் திறந்திருக்கும். இரண்டு கால்களையும் இழந்து சுயமாக நடக்க முடியாத நிலையிலும் உற்சாகம் குறையாது தானும் தனது சமூகத்துக்கும் தொண்டாற்றி வருவது அறிந்து முதியோராகிக் கொண்டிருக்கும் நாமும், முதியோர்களும் எந்த நிலை ஏற்படினும் மனம் தளராது வாழ்வேண்டும் என்பதற்கு திரு. கனகராஜா அவர்கள் ஒரு எடுத்துக்காட்டு. அவர் பல வருடங்கள் நலத்துடன் வாழவேண்டும் என வாழ்த்துகிறேன்."

சண்முகம் பழனிசாமி
san_palanisamy@hotmail.com

# குளிர் காலத்துக்கான முன்னெச்சரிக்கை

தற்போது கனடாவில் நிலவுகின்ற மென்மையான குளிர்க் காலநிலை படிப்படியாக உயர்ந்து, வருகின்ற 'வின்டர்' காலம் மிகவும் கடுமையான குளிருடன் கூடியதாக இருக்குமென்று கனடிய விவசாயிகள் காலக்கணிப்பு தெரிவிக்கின்றது. ஒன்ராறியோ மாநிலமும் அதனையண்டிய பகுதிகளும் பூஜ்ஜியத்துக்குக் கீழே குளிர்நிலையுடன் கூடியதாகவும், வீச்சான பனிப் பொழிவையும் கொண்டதாக இருக்குமென மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேற்படி காலக்கணிப்பின் வெளியீட்டாளரான ஜனிஸ் ஸ்ரில்மன் வெளியிட்டுள்ள அறிக்கையில், 2015ன் ஆரம்பமே கனடியர்கள் மோசமான காலநிலையை அனுபவிப்பதாக அமையுமென்று எச்சரித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனாவும் நதிஷாவும் கல்விச் சாதனை மாணவிகள்
## Educational Achievement by two Tamil girls




ரொறன்ரோ பெரும்பாகத்தைச் சேர்ந்த இரண்டு மாணவிகள் உயர்நிலைப் பாடசாலைகளில் அதிக சராசரிப் புள்ளிகளைப் பெற்று இவ்வருடம் பெரும் சாதனை நிகழ்த்தியுள்ளனர்.

ரொறன்ரோ கத்தோலிக்க கல்விச் சபையின் நிர்வாகத்திலுள்ள பிஷப் அலன் பாடசாலை மாணவியான மீனா பாலசுப்பிரமணியம் நூறு வீத சராசரிப் புள்ளிகளைப் பெற்று ரொறன்ரோ பல்கலைக் கழக Life Science கற்கைக்குத் தெரிவாகியுள்ளார்.

டுர்ஹம் கல்விச் சபையின் நிர்வாகத்திலுள்ள கிளாரக் றிச்சர்ட்சன் பாடசாலை மாணவி நதிஷா ஜெயகாந்தன் 98.83 சராசரிப் புள்ளகளைப் பெற்று, வாட்டர்லூ பல்கலைக் கழகத்தில் Biomedical Engineering கற்கைக்குத் தெரிவாகியுள்ளார்.

வருடாந்தம் உயர்நிலைப் பாடசாலைகளிலிருந்து பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர்களின் சராசரிப் புள்ளிகளின் அடிப்படையில் முன்னணியில் நிற்கும் சாதனை மாணவர்களின் விபரங்கள் அதிகாரபூர்வமாகப் பட்டியிலிடப்படுவது வழக்கம். இந்த வகையில் இம்முறை சாதனை புரிந்து கனடியத் தமிழருக்குப் பெருமை சேர்த்துள்ள மீனா மற்றும் நதிஷா ஆகியோரின் படங்களுடன் இணைந்த செய்திகளைக் கனடிய பிரதான ஆங்கில ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

ரொறன்ரோவின் முன்னணி ஊடகமான 'ரொறன்ரோ ஸ்டார்' கடந்த மாத 27ம் திகதிய இதழில் இச்செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டுள்ளது.

## பிரஜாவுரிமை பெறாது காத்திருப்பவர்கள் வதிவிட உரிமையை இழக்கும் அபாயம்!

கனடாவில் நிரந்தர வதிவிட உரிமை (Permanent Resident) பெற்ற பின்னர், பல வருடங்களாக் கனடிய பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்காது இருப்பவர்கள், புதிய பிரஜாவுரிமைச் சட்டத்தின்கீழ் தங்கள் நிரந்தர வதிவிட உரிமையை இழக்கும் நிலையேற்படலாமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விபரங்கள் அறிவிக்கப்படவில்லையாயினும், குடிவரவுத் திணைக்களம் இதனை ஒரு முன்னறிவிப்பாக வெளியிட்டுள்ளது. அடுத்தாண்டு ஜுன் மாதமளவில் புதிய பிரஜாவுரிமைச் சட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது. இதனைக் கனடிய நாடாளுமன்றம் ஏற்கனவே அங்கீகரித்து விட்டது.

மொழித் தேர்ச்சி, குடியிருந்த கால நீடிப்பு என்பவை புதிய சட்டத்தில் முக்கியமானவை. அத்துடன் பிரஜாவுரிமைப் பரீட்சை விதிவிலக்கு 65 வயதாக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே 55 வயதைத் தாண்டியவர்ள் இப்பரீட்சைக்குத் தோற்றாமலே கனடியப் பிரஜாவுரிமையைப் பெறமுடியும். புதிய சட்டம் இந்தச் சலுகையைப் பெறும் வயதை 65 ஆக அதிகரித்துள்ளது.

அதேசமயம், கனடிய கடவுச் சீட்டு (பாஸ்போர்ட்) அலுவலகம் தற்போது குடிவரவு மற்றும் பிரஜாவுரிமைகள் அமைச்சின்கீழ் கொண்டுவரப்பட்டிருப்பதும் கவனிக்கப்பட வேண்டியது. இதனால், பிரஜாவுரிமை பெறாதவர்கள் அத்தியாவசிய வெளிநாட்டுப் பயணத்துக்கான தற்காலிக பயண ஆவணம் (Travel Document) பெறுவதில் சில நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடலாம்.

புதிய பிரஜாவுரிமைச் சட்டம் அதிக கெடுபிடிகளைக் கொண்டதாக இருக்குமென்பதால், பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்கத் தகுதியானவர்களை இப்போதே விண்ணப்பித்து புதிய சட்டத்திலிருந்து தப்பிக் கொள்ளலாமென சமூக சட்ட உதவி அலுவலகங்கள் பொதுமக்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளன.

## நகர சபைகளின் தேர்தல் அடுத்த மாதம் 27ம் திகதி

ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள நகரசபைகள், மாநகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்கான கவுன்சிலர்கள், நகர முதல்வர்கள், கல்விச் சபை உறுப்பினர்களுக்கான தேர்தல் அடுத்த மாதம் (அக்டோபர்) 27ம் திகதி நடைபெறவுள்ளது. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை இத்தேர்தல் நடத்தப்படுகின்றது.

இத்தேர்தலில் போட்டியிடுபவர்கள் தங்கள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வது கடந்த ஜனவரி 2ம் திகது ஆரம்பமானது.

இந்த மாதம் 12ம் திகதி நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கான இறுதி நாளாகும். ஏற்கனவே நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தவர்கள் இடம் மாறிப் போட்டியிட விரும்பினால் அல்லது போட்டியிலிருந்து விலக விரும்பினால் அதற்கும் இந்த மாதம் 12ம் திகதியே இறுதி நாளாகும்.

ரெராறன்ரோ பெரும்பாகத்திலுள்ள ரொறன்ரோ, மிசிசாகா, மார்க்கம், பிக்கரிங் ஏஜக்ஸ், யோர்க், பீல் பகுதிச் சபைகளில் பெருமளவிலான தமிழர்கள் கவுன்சிலர்களாகள் மற்றும் கல்விச் சபை உறுப்பினர்களாக போட்டியிட நியமனம் தாக்கல் செய்துள்ளனர். இவர்களுள் சிலர் இந்த மாதம் 12ம் திகதி போட்டியிலிருந்து விலகிக் கொள்ளலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ரொறன்ரோவின் மேயர் பதவிக்குப் போட்டியிட நியமனம் தாக்கல் செய்திருந்தவரான கரேன் ஸ்ரின்ஸ் தேர்தலிலிருந்து விலகியுள்ளார். தற்போதைய நிலைவரப்படி றொப் போஃர்ட், ஒலிவியா சோ, ஜோன் ரோறி, டேவிட் சொக்நாகி ஆகிய நால்வர் மட்டுமே இப்பதவிக்கான போட்டியிலுள்ளனர்.

ரொறன்ரோ நகரசபையின் 2ம் வட்டாரத்தில் (எற்றேபிக்கோ வடக்கு) மேயர் றொப் போஃர்ட்டின் சகோதரியின் மகனான 22 வயது மருமகன் மைக்கல் போஃர்ட் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது.

கருத்துக் கணிப்பொன்று இவருக்கே வெற்றி வாய்ப்பு அதிகமுள்ளதாகத் தெரிவித்துள்ளது. இந்த வட்டாரத்தில் றொப் போஃர்ட்டின் சகோதரர் டக் போஃர்ட் அங்கத்தவராக உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்திமகாலச் சேவை இயக்குனராக (Funeral Director) பட்டம் பெற்ற முதலாவது கனடியத் தமிழர் சிவதர்மன் விலோஷன்



கனடியப் பல்கலைக் கழகமொன்றில் 'எலெக்றிக்கல் என்ஜினியரிங்' கல்வி கற்று பட்டம் பெற்ற ஒருவர், பின்னர் இங்குள்ள கல்விச் சபையொன்றில் ஐந்து வருடங்கள் தமிழ்ப் போதனாசிரியராகக் கடமையாற்றியதை அடுத்து, முற்றிலும் புதிய துறையொன்றில் காலடி வைத்து அதிலும் பட்டம் பெற்று கனடியத் தமிழர்களில் ஒரு சாதனையாளராகத் திகழ்கிறார்.

இதற்கு முன்னர் கனடிய மண்ணில் எந்தவொரு தமிழரும் இத்துறையில் துணிச்சலுடன் இறங்கவில்லை. உண்மைதான்! இந்தக் கல்வியிலும் தொழில் முயற்சியிலும் இறங்குவதற்கு மனவலிமையும் தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் இருக்க வேண்டும்.

அத்தனையும் நிறைந்த எம்மவரான சிவதர்மன் விலோசன் அவர்களை வாழ்த்தி வரவேற்று எமது வாசகர்களுக்கு அவரது அபார முயற்சிதனை அறியத் தருவதில் 'தமிழர் தகவல்' பெருமை கொள்கிறது.

மரணம் என்பது ஒவ்வொருவர் வாழ்வின் இறுதியிலும் தவிர்க்க முடியாத நிகழ்வு. ஒவ்வொருவரதும் இறுதிச் சடங்கை அவரவர்க்கு உரிய மரியாதையுடன் கௌரவமாகச் செய்ய வேண்டுமென்பதே அவர்களது குடும்பத்தவரதும் நண்பர்களதும் விருப்பமாக இருக்கும்.

இதனை நாம் விரும்பியவாறு எமது பாரம்பரிய பண்பாட்டு சமய நெறிகளுக்கு அமையச் செய்வதற்கு, அதற்கான தகுதியும் தராதரமும் கொண்ட ஒருவராகப் பட்டம் பெற்று இன்று எம்மத்தியில் திகழ்கின்றார் திரு. விலோஷன்.

தமிழர் தகவலின் 25ம் பக்க விளம்பரத்துக்கு உங்களை அழைத்துச் செல்கிறோம். மார்க்கம் நகரில் வூட்பைன் வீதியில் 8911ம் இலக்கத்தில் அமைந்துள்ள 'சப்பல் றிட்ஜ்' (Chapel Ridge) இறுதிச் சடங்கு நிறுவனத்துடன் இணைந்து இயங்கும் 'ஹெவின் கெயர்' (Heaven Care) என்னும் நிறுவனத்தில் இறுதிச் சடங்கு கவுன்ஸிலராக 2011ம் ஆண்டிலிருந்து பணியாற்றி வருகின்ற திரு. விலோஷன், ரொறன்ரோ ஹம்பர் கல்லூரியில் இறுதிச் சடங்கு இயக்குனர் (Funeral Director) டிப்புளோமாக் கல்வியை மேற்கொண்டு முதலாம் பிரிவில் சித்தியடைந்துள்ளார் என்பது பெருமைக்குரிய செய்தி.

இறந்த ஒருவரது உடலை உரிய வகையில் பதனிட்டு (embalming) மரணச் சடங்குக்கு ஏற்றதாகத் தயார் பண்ணுவதிலிருந்து இத்துறைசார் அனைத்துச் சேவைகளையும் வழங்கும் முழுநேரக் கற்கையை முடித்து, அதற்கான பயிற்சி நெறியிலும் விலோஷன் சித்தியடைந்துள்ளார். இத்துறையில் இந்தக் தகுதியைப் பெற்ற முதலாவது தமிழர் இவரே என்பதும் குறிப்பிடத்தக்கது.

இறுதிச் சடங்கு என்பது இறந்தவரது உடலை இறுதிச் சடங்கு மண்டபத்துக்கு எடுத்துச் செல்வதிலிருந்து, தகனக் கிரியை அல்லது அடக்கம் முடிந்த பின்னர் குடும்ப உறுவினர்களுக்கு அடுத்த செயற்பாடுகளுக்கு ஆலோசனை வழங்குவது, தேவையேற்படின் அவர்களின் மனஆறுதலுக்கு 'கவுன்சிலிங்' வழங்குவது, வேண்டப்படும் ஆவணப் பதிவுகளைச் செய்து கொடுப்பது உட்பட சுமார் எழுபத்தைந்து வரையான கடமைகளைக் கொண்டது.

"ஒவ்வொருவரதும் குடும்ப நிலைக்கு ஏற்றதாக இறுதிச் சடங்கினை ஏற்பாடு செய்வது முக்கியம். சிலசமயம் அவர்களது நிதி நிலைமையையும் கவனத்தில் எடுக்க வேண்டியது அவசியம். சிலர் மிகக் குறுகிய காலத்தில் இறுதிச் சடங்கை நடத்த வேண்டியிருக்கும். சிலர் ஓரிரு வாரங்களுக்குப் பின்னர் நிகழ்த்த வேண்டியிருக்கும். சிலரது உடல்களை தூர இடங்களி - லிருந்து அல்லது வேறு நாடுகளிலிருந்து இங்கு வரவழைக்க வேண்டியிருக்கும். அல்லது கொண்டு செல்ல வேண்டியிருக்கும். இவைகளை அவரவரது தேவைக்கும் வசதிக்குமேற்ப சட்ட ஒழுங்கக்கு அமையச் செய்து கொடுப்பது முக்கியம்" என்று கூறுகிறார் இத்துறையின் அனுபவசாலியும், இப்போது ஒரு Funeral Director ஆகவும் திகழும் சிவதர்மன் விலோஷன்.

தமிழீழத்தின் யாழ்ப்பாணத்தில் கோண்டாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி கற்றவர். ஒட்டாவா காள்ரன் பல்கலைக் கழக 'எலக்றிக்கல் இன்ஜினியரிங்' பட்டதாரி.

யோர்க் பிராந்திய கல்விச் சபையின் தமிழ்ப் போதனாசிரியராக ஐந்தாண்டு பணியாற்றியவர். விலோஷனின் மனைவி வீடு விற்பனை முகவராக ரொறன்ரோவில் கடமையாற்றுகிறார். இவர்களுக்கு இரு பிள்ளைகள் உண்டு.

திரு. சிவதர்மன் விலோஷன் அவர்களின் இந்த முன்மாதிரி, மேலும் பல தமிழ் இளையோரை இத்துறையில் கல்வி கற்று முன்னேற்ற ஊக்கமளிக்குமென நிச்சயமாக நம்பலாம்.●

-- திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# தமிழின் எதிர்காலம் பிரகாசமா? இருட்டா?

**அண்மையில் ஆனந்தவிகடன் சஞ்சிகையின் 'விகடன் மேடை' கேள்வி பதில்ப் பகுதியில் சர்வதேச எழுத்தாளரான முத்துலிங்கம் சில கேள்விகளுக்கு அளித்த பதில்கள் இங்கு நன்றியுடன் பிரசுரமாகின்றது.**

**1) இன்னும் 100 ஆண்டுகளில் இன்று இருக்கும் 1000 மொழிகள்வரை அழிந்துவிடும் என்று சொல்லப்படுகிறதே... தமிழின் நிலைமை எப்படி இருக்கும்?**

ஆயிரம் வருடங்களாக மொழி அழிவதும், புது மொழி உண்டாவதும் நடந்துகொண்டுதான் இருக்கிறது. சிலவருடங்கள் முன்பு அந்தமான் தீவில் வயதான பெண்மணி ஒருவர் இறந்துபோனார். அவர் பேசிய 'போ' மொழியும் அவருடன் அழிந்துபோனது. அந்த மொழி தெரிந்த கடைசி ஆள் அவர். 65,000 வருடத்திய கலாச்சாரம் துண்டுபட்டது என்று பத்திரிகைகள் எழுதின. நூறு வருடம் முன்பு ஹீப்ரு மொழி அழிவின் வாசலில் நின்றது. இன்று 9 மில்லியன் மக்கள் அந்த மொழியை பேசுகிறார்கள். அவர்களுக்கு இஸ்ரேல் என்று ஒரு நாடு கிடைத்ததுதான் காரணம். 50 வருடம் முன்பு ஹவாய் மொழி அழிவு நிலையில் இருந்தது. இன்று அதை மீட்டெடுத்துவிட்டார்கள். நவீன துருக்கிய மொழியின் வயது 80. இந்தமொழியில்தான் ஓர்ஹான் பாமுக் நாவல் எழுதி நோபல் பரிசு பெற்றார்.

தமிழுக்கு அழிவு வெளியே இருந்து வரப்போவதில்லை. தமிழர்களால்தான் வரும். போலந்தில் பிறந்த ஒருத்தர் போலந்து மொழியில் படிப்பார். ரஸ்யாவில் பிறந்த ஒருத்தர் ரஸ்ய மொழியில் படிப்பார். டென்மார்க்கில் பிறந்த ஒருத்தர் டேனிஷ் மொழியில் படிப்பார். தமிழ் நாட்டில் பிறந்த ஒருத்தர் தமிழ் படிக்காமலே மேல்படிப்பு படித்து வேலை தேடிக்கொள்ளலாம். இப்படியான நிலைமை தமிழ்நாட்டில் இருந்தாலும் புலம்பெயர் சூழல் ஆரோக்கியமானதாக இருக்கிறது.

'அறிவகம்' என்ற அமைப்பின் மூலம் ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ் பாடத் - திட்டத்தின் கீழ் 3000 புலம்பெயர் தமிழ்ச் சிறார்கள் ஆண்டுதோறும் தேர்வு எழுதுகிறார்கள். இதனால் ஒரு லாபமும் அவர்களுக்கு கிடையாது. ஆர்வம்தான் காரணம். வைதேகி ஹெர்பர்ட் எனும் அமெரிக்கப் பெண்மணி 12 சங்கநூல்களை ஆங்கிலத்தில் எளிமையாக மொழிபெயர்த்திருக்கிறார். 2000 வருடங்களாக ஒருவரும் செய்திராத சாதனை இது. கல்வியாளர்கள் கையில் மாட்டியிருந்த சங்கநூல்கள் இன்று 12 வயது மாணவர்களும் படிக்கக்கூடியதாக இலகுவாக இருக்கின்றன. டிஜிடல் மக்சிம் திருமூர்த்தி ரங்கநாதனின் முயற்சியால் தமிழில் மின்புத்தகங்கள் வெற்றி கண்டுவருகின்றன. உலகின் எந்தப் பகுதியில் இருந்தும் ஐட்யூன் மூலம் தரவிறக்கம் செய்து படிக்கலாம். அமெரிக்க தமிழர் குமார் சிவலிங்கம் குழந்தைப்பாடல்களையும் குழந்தை கதைகளையும் அச்சு/ஒலி புத்தகங்களாக ஆங்கிலத்திலும் தமிழிலும் அழகான படங்களுடன் உலகத் தரத்தில் வெளியிட்டிருக்கிறார். சென்னை புத்தக காட்சியில் கிடைக்கின்றன.

தமிழின் எதிர்காலம் ஒருபக்கம் பிரகாசமாகவும் இன்னொரு பக்கம் இருட்டாகவும் உள்ளது. எந்த திசையை தமிழர்கள் தேர்வுசெய்வார்கள் என்பது ஊகம்தான்.

**2) உங்கள் கதைகளில் வியப்பான சில புள்ளிவிவரங்கள் இடம்பெறுகின்றன. பல நாடுகளில் வாழ்ந்த அனுபவம், படித்த அனுபவம் எல்லாவற்றையும் கதைகளில் சுவாரஸ்யமாக சேர்க்கிறீர்கள். அதுதான் மற்ற எழுத்தாளர்களிடம் இருந்து உங்களை வித்தியாசப் படுத்துகிறது. இது நீங்கள் முயன்று ஏற்படுத்திக்கொண்ட பணியா?**

ரயில் நிலையத்தில் மலர்ந்த கண்களுடன் நிற்கும் குழந்தைபோல நானும் வியப்படைவதை இன்னும் நிறுத்தவில்லை. ஓர் எழுத்தாளர் சொல்வார் எப்பொழுது ஒருவருக்கு ஆச்சரியங்கள் நின்றுவிடுகின்றனவோ அன்றே அவருக்கு கற்பனையும் நின்றுபோகும் என்று. ஆச்சரியப்பட்டுக்கொண்டே இருப்பதுதான் எழுத்தாளரின் வேலை. படைப்புத் திறனை அது பெருக்கும். அமெரிக்க எழுத்தாளர் மார்க் ட்வெய்ன் சொல்வார். "நான் சிறுபையனாக இருந்தபோது எனக்கு நடந்தவையும் நடக்காதவையும் நினைவில் இருந்தன. இப்போது நடக்காதவை மட்டுமே நினைவில் இருக்கின்றன." எல்லா எழுத்தாளர்களுக்கும் இது உண்டு. என்னிடமும் இருக்கிறது.

ஏதாவது கட்டுரையோ கதையோ எழுதத் தொடங்கும்போது 'இதைப்பற்றி சொல்லவேண்டும்' என்று திட்டம் போடுவதில்லை. எழுதும்போது அவையாகவே வந்து இணைந்துகொள்ளும். நல்ல நாவல் ஒன்று படித்துக்கொண்டு போகும்போது சுவாரஸ்யமான தகவல் ஒன்று கிடைக்கும். அது மனதிலே பதிந்துபோகும். நாவல் கதை மறந்தாலும் தகவல் மறப்பதில்லை.

மாவீரன் அலெக்சாண்டர் பற்றி படித்த ஒரு புத்தகத்தில் அவருடைய குரு அரிஸ்டோட்டல் பற்றியும் செய்தி இருந்தது. அந்தக் காலத்தில் ஒரு பெண்ணுக்கு கர்ப்பமாகும் சாத்தியக்கூறு உள்ளதா என்று கண்டறிவதற்கு ஒரு சின்ன சோதனை செய்வார்கள். இரவு படுக்க முன்னர் அந்தப் பெண்ணின் உறுப்புக்குள் ஒரு வெள்ளைப் பூண்டை செருகிவிடுவார்கள். அடுத்தநாள் காலை அந்தப் பெண்ணின் வாயில் வெள்ளைப்பூண்டு மணம் வந்தால் அவள் கருவுற்றுவிடுவாள். அல்லாவிடில் கர்ப்பமாகும் வாய்ப்பு இல்லை. இந்த அபத்தமான சோதனையினால் எத்தனை பெண்களின் வாழ்க்கை சீரழிந்ததோ. இதை எண்ணும்போது மனிதனின் மூடத்தனத்துக்கு எல்லையில்லை என்றுதான் தோன்றும்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# மனமே! நலமா?

45

பிரபஞ்சத்தில் எல்லாமே ஒரு காரணத்தோடுதான் உருவாகியுள்ளன. அந்தச் சக்தியே எல்லாவற்றையும் நல்ல நிலையில் வைத்திருக்கிறது. எதற்காக நாம் கவலைப்பட வேண்டும் என்று நினைத்தால் அமைதி பெறலாம். உலகத்தைப் பார்த்து பரவசமடைந்தால் மனம் நன்றாக வேலை செய்யும். நாமும் பிரபஞ்சத்தில் ஒரு வித்து என்று உணர்ந்தால் இயற்கையோடு ஒன்றிவிடலாம். வாழ்வை 'வண்ணக் களஞ்சியம்' என்று கூறி பரவசப்பட்டவர் யுகக்கவிஞர் பாரதி. இப்படித்தான் நாமும் வாழ்ந்து பார்க்க வேண்டும்.

உண்மை மலர்ந்துவிட்டால் மனம் சுதந்திரம் பெறும். அப்போது எந்தக் கவலையும் துன்பமும் மனதை நெருக்குவதில்லை. மனம் அமைதியாக உள்ள வேளையில் மாசு அகற்றப்படுகின்றது. அறிவும் அதிகமாகும்போது கவலை குறைகின்றது. எனவே, தொடர்ந்து அறிவைப் பெருக்கும் முயற்சியிலும் நாம் ஈடுபட வேண்டும். எவருக்கும் தெளிவு வருவது அவரவர் சிந்தனைப்படியேயாகும். நல்ல வழியில் செல்பவர்களுக்கு எந்தத் தொல்லையும் இருப்பதில்லை. சுயமாக சிந்தித்தால் உள்ளம் விரைவாக வந்தடையும். மனம் ஒரு குரங்கல்ல. அது பேரானந்தமாகும் நிலைக்கும் சென்றுவிடும் என்பதனை உணர முடியும்.

பலரும் தங்களுக்குள் பலவிதமான ஆறுதல்களைச் சொல்லி தப்பித்து விடுகின்றனர். உண்மையை மறுக்காமல் இருந்தாலே பல கஷ்டங்களும் அகன்று விடுகின்றன. 'சமாளிப்பு' என்பது முக்கியமான மனோதத்துவம். இதிலிருந்து தப்பித்து மனதின் படைப்பு திறனைக் கூட்ட வேண்டும். எல்லாப் பிரச்சனைகளுக்கும் திடீர் தீர்வு கிடையாது. ஆனால் உடனே யோசித்து முடிவு பெற வேண்டும்.

மனதின் செயற்பாடு அதற்கு நாம் கொடுக்கும் பயிற்சியைப் பொறுத்தது. சிறிய வயதில் இருந்தே சரியான பயிற்சி கொடுத்தால் நன்றாக இயங்கலாம். அவரவர் முயற்சியே இதற்குத் தேவையாகும். இதிலும் அபரிமிதமான கவனம் தேவைப்படுகிறது. துன்பங்களையே ஒரு பெரிய வாய்ப்பாக சிலர் எடுத்துக் கொண்டு பெரிய சாதனைகளைப் புரிந்திருக்கிறார்கள். மனம் அந்த அளவுக்கு பக்குவப்பட வேண்டும். சக்தியை ஒரு துளிகூட வீணடிக்காமல் நல்ல பலனாக மாற்றுவதே பெரிய சாதனை. அப்படியானவர்களே உதாரண புருஷர்களாகின்றனர்.

எமது உண்மையான பலம் மனதின் ஆழத்தில் உள்ளது. அமைதியாக மனதினை வைத்துக் கொள்கையில் ஆழத்தை அடையும். அங்கே சலன-மில்லை. படைப்புத் திறன்தான் உண்மை. பெரிய ஞானிகள் அவ்வாறுதான் செயல்பட்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் மண்டையைப் பிய்த்துக் கொள்ளவில்லை. மனம் தியான நிலைக்குச் செல்கிறது. செயல், படைப்பு, இன்பம் ஆகிய மூன்றும் ஒன்றாகவே கிடைத்துவிடுகிறது. அமைதியும், புனிதமும், அகிம்சையும் நிறைந்த கீழைத்தேசத்தைய மனிதப் படுகொலை, போர்த்தொடுப்பு, பழிவாங்குதல், வல்லரசுப் போட்டிகள் நிறைந்த மேற்குலகையும் பார்க்கும்போது இதன் அர்த்தம் புரியும். எல்லாருமே பிரபஞ்சத்தின் மனிதர்கள்தான். ஆனால் மனம் மட்டும் வேறு வேறாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

'எங்கே மனம் பயம் இல்லாமல் இருக்கிறதோ, அங்கே என்னை எடுத்துச்செல்' தாகூர்.

மீண்டும் சந்திப்பேன்...●

## ஒன்பதாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 2015 ஜனவரியில் மலேஷிய கோலாலம்பூரில்

ஒன்பதாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு அடுத்தாண்டு ஜனவரி மாதம் 29ம் திகதியிலிருந்து பெப்ரவரி மாதம் முதலாம் திகதி வரையும் மலேஷியாவின் கோலாலம்பூரில் அமைந்துள்ள மலாய் பல்கலைக் கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உலகத் தமிழாராய்ச்சி மன்றம் 1964ம் ஆண்டு புதுடில்லி நகரில் நடைபெற்ற அனைத்துலக தெற்கிழக்காசியப் பிராந்திய அறிஞர் குழாம் சந்திப்பின்போது உருவாக்கப்பட்டது. 1966ல் கோலாலம்பூரில் முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடை-பெற்றது. அடுத்த மாநாடுகள் சென்னை, பாரிஸ், யாழ்ப்பாணம், மதுரை, கோலாலம்பூர், மொரிஷியஸ், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் சிறப்பாக நடைபெற்றன.

உலகம் முழுவதும் வாழும் தமிழ் மொழி சார்ந்த ஆராய்ச்சியாளர்களையும் கல்விமான்களையும் ஒன்றிணைக்கும் பாலமாக இந்த மாநாடு தொடர்ச்சியாக அமைந்து வருகின்றது. தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு, கலை, சமயம், மானிடவியல், வரலாறு, உளவியல், சமூகவியல் எனப் பன்முகத் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களிடமிருந்து 9வது மாநாட்டுக்கான கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன.

---

ஆனால் எங்கள் பிள்ளைகளுக்கோ 'இல்லை' என்ற சொல்லே தெரியாமல் நாங்கள் வளர்க்கிறோம். சிறிய வயதில் 20 டாலர் வெகுமதியோடு திருப்தியடைந்த பிள்ளை உயர் வகுப்பில் 200 டாலர் பெறுமதியை எதிர்பார்க்கிறது. பிள்ளைக-ளின் தேவைகளின் பெறுமதி உயருகிறதே ஒழிய பெற்றோரின் வருமானம் உயருவதில்லை. இவையெல்லாவற்றையும் பிள்ளைகள் உணராத வகையிலேயே நாம் அவர்களை வளர்க்கிறோம். கனடிய சமுதாயம் ஒரு நுகர்வோர் சமுதாயம் (Consumer society). மாணவர்களின் தேவைகளுக்கு வானமே எல்லையாக அமைகிறது. கற்றல் என்பதும் நல்ல புள்ளிகள் பெறுவது என்பதும் மாணவர்களின் கடமை என்பதை சிறுவயதிலேயே பிள்ளைகள் உணரும் வகையில் அவர்களை வளர்த்தல் பெற்றோரின் கடமையாகும்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# வெகுமதிகளும் பரீட்சைப் புள்ளிகளும் Should you pay for good grades

கோடை விடுமுறை காலம் முடிந்து விட்டது. பிள்ளைகளின் தேர்ச்சி அறிக்கைகள் பெற்றோரின் கைகளை வந்து அடைந்துவிட்டன. இரண்டாம் நிலைப் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்த பிள்ளைகள் தங்கள் பெறுபேறுகளுக்கு அமைய பல்கலைக்கழகங்களுக்கோ அன்றேல் சமூகக் கல்லூரிகளுக்கோ செல்ல ஆரம்பித்து விட்டனர். பல்கலைக்கழக கல்வியையோ, வேறு உயர்கல்வியையோ மேற்கொண்ட மாணவர்கள் தங்கள் எதிர்கால நோக்குகளுக்கமைய வேலைகளைத் தேடியும், அல்லது மேலும் படிக்கும் ஆயத்தங்களை மேற்கொள்ளும் நேரமுமாகும். எதுவாக இருந்தாலும் இக்காலகட்டத்தில் வீடுகளில் பெரிதாகப் பேசப்படும் விடயம் மாணவர்கள் பெற்ற புள்ளிகளும், அடைவுகளுமேயாகும்.

பல வீடுகளில் பிள்ளைகள் தாங்கள் பரீட்சைகளில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றது பெற்றோரின் திருப்திக்காகத்தான் என்பதுபோல் நடந்து கொள்கிறார்கள். பெற்றோரும் பிள்ளைகள் திறமையாகச் செயற்படாவிட்டால் அதனால் தங்களுக்கும், குடும்பத்துக்கும் அவமானம் ஏற்படும் என்ற மனநிலையை பிள்ளைகளுக்குச் சிறுவயதில் இருந்தே ஏற்படுத்தி விடுவதாலேயே பிள்ளைகள் இவ்வாறு சிந்திக்கிறார்கள். பல வீடுகளில் பிள்ளைகள் நல்ல பெறுபேறுகளைப் பெற்றால் வெகுமதிகளை வழங்குவோம் என வாக்குறுதியும் அளித்து விடுகிறார்கள். ஆகவே பிள்ளைகளின் மனநிலைக்குப் பொறுப்பு பெற்றோர்தான் என நிச்சயமாகக் கூறலாம்.

நாங்கள் மாணவர்களாக இருந்த காலத்தில் வீட்டில் எவ்வளவோ வீட்டு வேலைகளைச் செய்தபடியே படித்தோம். எவ்வளவோ பிள்ளைகள் தங்கள் பெற்றோரோடு சேர்ந்து தோட்டங்களிலும், வயல்களிலும் வேலை செய்துவிட்டுத்தான் பாடசாலைக்குச் சென்றார்கள். அன்று குடும்பங்கள் பெரிதாக இருந்ததால் வீட்டு வேலைப் பளுவை எல்லாப் பிள்ளைகளும் பங்கு போட்டுச் செய்தார்கள். பணவசதி குறைந்த குடும்பப் பிள்ளைகள் எப்பொழுது படித்து முடித்து பெற்றோருக்கு ஒத்தாசை செய்வோம் என்ற சிந்தனையோடு படித்தார்கள். ஆனால் இன்றோ பெற்றோர் பிள்ளைகளிடமிருந்து வீட்டு வேலை சம்பந்தமாக எந்த ஒரு உதவியையும் பெறுவதில்லை.

அது மாத்திரமல்ல பிள்ளைகளின் சுயதேவைகளைக் கூட பெற்றோரே செய்து கொடுக்கிறார்கள். பல பெற்றோர் "நீங்கள் ஒன்றுமே எங்களுக்குச் செய்ய வேண்டாம். நன்றாகப் படித்தால் காணும்"என்று பகிரங்கமாகக் கூறுவதைக்கூட கண்டிருக்கிறேன். பிள்ளைகள் தங்களின் எதிர்காலம் சுபீட்சமாக அமைவதற்காகத்தான் படிக்கிறார்கள் என்பதை அவர்கள் உணர வேண்டும். அத்துடன் தங்கள் சுயதேவைகளை மாத்திரம் கவனிப்பதோடு நில்லாது வீட்டு வேலைகளிலும் ஒரு அளவுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதைச் சிறுவயதில் இருந்தே பிள்ளைகளுக்கு பெற்றோர் பழக்கிக் கொடுத்தல் வேண்டும்.

பிள்ளைகளின் உடுப்புகளைத் தோய்த்து, அறையைத் துப்பரவாக்கி, போக வேண்டிய வகுப்புகளுக்கெல்லாம் காரில் கூட்டிச் சென்று பிள்ளைகளைப் பொறுப்பற்றவர்களாக மாற்றுவதோடு மாத்திரம் நில்லாது, "நல்ல புள்ளிகள் பெற்றால் அது வாங்கித் தருகிறோம், இது வாங்கித் தருகிறோம்" என வாக்குறுதிகளையும் வழங்கி விடுகிறார்கள். பிள்ளைகள் அதனை மனதில் நன்றாகப் பதித்துக் கொள்கிறார்கள். பின்பு என்ன, பரீட்சைப் பெறுபேறுகள் வந்தவுடன் பெற்றோரைப் பணயக் கைதிகளாக்கி விடுகிறார்கள். இவ்வாறு பெற்றோர் நடந்து கொள்வதால், கற்றல் என்பது ஆசையோடும், மகிழ்ச்சி-யோடும் நடைபெற வேண்டியதொன்றாகும். அதற்கு மாறாகப் பிள்ளைகள் - "எனது வெகுமதி என்ன" என்று எல்லா நேரமும் கேட்கத் தொடங்கி விடுகிறார்கள் என Allyson Shafer என்ற Parenting Expert கூறுகிறார்.

சிறு வகுப்புகளில் சிறிய வெகுமதிகளோடு திருப்தி அடைந்த பிள்ளைகள், வகுப்புகள் உயர உயர அவர்களின் வெகுமதிகள் சம்பந்தமான பெறுமதியும் உயர்ந்து கொண்டு போகிறது. இந் நாட்டில் 18 வயதில் கார் ஓடத் தொடங்கி விடுகிறார்கள். சாதாரண கார்களோடு அவர்கள் திருப்தியடையப் போவதில்லை. பெற்றோரின் வல்லமைக்கு அப்பாற்பட்ட வாகனங்களையே வாங்கித் தரும்படி பிடிவாதம் பிடிக்கிறார்கள். எந்த ஒரு பொருளும் கஷ்டப்பட்டுப் பெற்றால்தான் அதன் அருமை விளங்கும். ஆகவே தங்கள் சுய சம்பாத்தியத்தில் பிள்ளைகள் பொருட்களை வாங்கினால் அவர்களின் சுயகௌரவத்தையும் அது உயர்த்த வழி வகுக்கிறது.

Kumon Canada இன் சந்தைப்படுத்தல் முகாமையாளரான Vernon Gonsolov,""புள்ளிகளிலும் பார்க்க ஒரு மாணவனுக்கு ஆர்வமும், தன்னம்பிக்கையுமே அவசியம்" (Motivation and Confidence) என்கிறார். மாணவர்களின் தேர்ச்சி அறிக்கையில் கற்றல் திறன்கள் (Learning skills) என்ற ஒரு பகுதியைப் பார்த்திருப்பீர்கள். Milton ஐச் சார்ந்த Grade 7 ஆசிரியை Valerie Class Night என்பவர் புள்ளிகளிலும் பார்க்க இக் கற்றல் திறன்களே முக்கியம் என்கிறார். புள்ளிகளை வைத்து ஒரு மாணவன் எவ்வாறு எதிர்காலத்தில் செயல்படுவான் என அளவீடு செய்வது பொருத்தமற்றது. வயது ஏற ஏற உயர் வகுப்புகளிலும், வேலைத் தளங்களிலும் கைகொடுப்பது இக் கற்றல் திறன்களேயாகும். ஆகவே புள்ளிகளுக்காகப் பெற்றோர் வெகுமதிகளை அளித்தல் பாராட்டக்கூடிய விடயமல்ல. நாளாந்தம் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையில் பேச்சுத் தொடர்பு (Communication) இருத்தல் மிகவும் அவசியம்.

சில சந்தர்ப்பங்களில் வெகுமதிகள் வெற்றியை அளிப்பதுண்டு. பிரிட்டிஷ் கொலம்பியாவில் இரு பழங்குடி மாணவர்கள் குழுக்களுக்கு (Aboriginals) 2003 இலிருந்து வெகுமதியாகப் பணம் வழங்கினார்கள். இதில் வகுப்புக்கு ஒழுங்காகச் சமுகமளித்தல், ஒழுங்காக இருத்தல் முதலியன கவனத்தில் எடுக்கப்பட்டன. இதன் மூலமாக மாணவர்களின் அடைவுகள் உயர்ந்தன. பாடசாலையை விட்டு இடையில் விலகிச் செல்லுதலும் மிக அதிக அளவில் வீழ்ச்சி அடைந்தது. ஒஹியோ மாகாணத்தில் மிகவும் வறிய ஒரு நகரத்திலும் வெகுமதிகள் வழங்கியதன் பின்பு மாணவர்கள் நன்றாகச் செயற்பட்டார்கள். இங்கு நாம் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய விடயம் யாதெனில் இப்பிள்ளைகள் யாவரும் மிகவும் வறியவர்களாக இருந்தனர். வெகுமதிகள், அதிலும் பணப் பரிசில்கள் அவர்களுக்கு மிகவும் ஊக்கத்தை அளித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் *பத்தாம் பக்கம்*

# கல் ஆனாலும்...

தடையறத் தாக்குவதற்கு ஆதியில் மனிதன் கையில் ஏந்திய முதலாவது ஆயுதம் - கல்!
சட்டப்படி காணியில் ஊன்றிவிட்டால் சர்வ வல்லமை இருந்தாலும் சட்டத்துக்குப் புறம்பாக யாரும் பிடுங்கிவிட முடியாது என்பதை இலங்கை அரசுக்கு தேசவழமை சட்டத்தின் மூலம் உணர்த்திடும் எல்லைக் கற்களை யாழ்ப்பாணத்தில் இன்றும் காணலாம். ஊருக்கு வழிகாட்டியாகவும், புகழுக்கு மெருகூட்டியாகவும் என்றும் திகழ்பவை மைல் கற்கள் எனப்படும்.

துயிலும் இல்லங்களாக உறுதியின் உறைவிடங்களாக ஊரிலிருந்தவை நடுகற்கள் அல்லது கற்திட்டைகள். ஒரு புறம் திறந்து மிகுதி கற்பலகைகளால் மூடப்பட்டிருப்பவை கற்திட்டையாகும். நெடுங்கல், கல்குவை, கல்பதுக்கை, குடைக்கல் போன்ற பெயர்சூட்டப்பட்ட கற்களும் நாகரீக நாடுகளில் அழியாத-வர்களை அடையாளப்படுத்துகின்றன. வாழ்நாள் சாதனைகளை குறிக்க பண்டைய மன்னர்கள் கல்லில் பொறித்த கல்வெட்டை, காகிதத்தில் கசக்குகின்றது நவீனம்.

திருவதிகையில் திருநாவுக்கரசு நாயனாரைக் கல்லில் கட்டி கடலில் விட்டுவிட அவர் குப்பம் என்னும் ஊரை மிதந்து அடைந்ததும், அதே அப்பர் சுமந்த செங்கற்கள் பொன்னாக மாறியதும், ராமனின் பாதம் பட்டதும் கல்லாக இருந்த அகலிகை பெண்ணானதும், அதே ராமாயணத்தில் கற்களால் பாலம் அமைத்து இலங்கை சென்றதும், சேரன் செங்குட்டுவன் இமயத்திலிருந்து கல்லைக் கொண்டு வந்து கண்ணகிக்கு சிலை எடுத்ததும், மதுரையில் கல்யானை கரும்பு சாப்பிட்டதும், ஆத்தூரில் கல்லில் செய்த கிளிகள் வானில் பறந்ததும் வயதான வார்த்தைகளில் வரலாறு வணங்கும் கற்கள்.

குக் கிராமங்களில் தெருவிளக்கை தாங்கிய ராந்தல் கற்கள், வெப்பத்தை உறிஞ்சி ஊர் பஞ்சாயத்து இருக்கைகளுக்கும் பொது (வம்பு) மேடைகளுக்கும் சூடு தணித்த பட்டியக்கற்கள், கிராமங்கள் தோறும் இளைஞர் பலம் பார்த்த இளவட்டக் கற்கள், இளைப்பாறும் பயணிகளின் பாரம் சுமக்கவென சாலை ஓரங்களில் கர்ப்பிணிகள் ஞாபகமாக வைக்கப்பட்ட சுமைதாங்கி கற்கள் எனப்பல கற்கள் செயலிழந்து போனது நினைவுகளை கிண்டி கிளறினால் மேலே வரும்.

உடல் உபாதை தரும் உமிழ்நீர் சுரப்பிகற்கள், சிறு நீரகற்கள், பித்தக்கற்கள் போன்றவை ரத்த சம்பந்தம் உடையவை. உரிய நேரத்தில் தகுந்த சிகிச்சை மூலம் மூச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்காதவை என்பார் டாக்டர் கதிர் துரைசிங்கம்.

கற்களில் ஆண் கற்களும் பெண் கற்களும் உண்டு. தட்டினால் மணி ஓசை எழுப்புவது ஆண் கல். தாள ஓசையை எழுப்புவது பெண் கல். ஏழு ஸ்வரங்களை வெளிப்படுத்தும் கல்தூண்களை தட்டிப்பார்ப்பவர்கள் கற்களை காதலிப்பர்.

தானியங்களை அரைக்க அம்மிக்கல்லும் ஆட்டுக்கல்லும் இல்லையே என்ற காரணக் கவலையுள்ள பாட்டிகளும், ஒரு கல்லை மேலே தூக்கிப்போட்டு அது கீழே வருவதற்குள் தரையில் பரவிய கற்களை சேகரித்து, சேகரித்த கல்லும் சிதறாமல் மேலே போன கல்லையும் கீழேவருமுன் தவற விடாது பிடித்திடும் கொக்கான் பாட்டிகளும் இப்பவும் உண்டு.

செயற்கையாக மாம்பழங்களை பழுக்க வைக்கும் கார்பைட் கல் இயற்கையான ஆரோக்கியத்தை சுக்கல் ஆக்கும்.

சாதாரணமாக கற்களை விட உல்லாச பயணிகள் சபை விளம்பரப்படுத்தும் ரத்தின கற்கள், ஆதிவாசிகள் நெருப்பெடுத்த சிக்கி முக்கி கற்கள், நிலவில் இருந்து எடுத்து வரப்பட்டு இலங்கையிலும் பார்வைக்கு வைக்கப்பட்ட நிலாக்கல், இதர நாடுகளைப் போலவே இலங்கையிலும் விழும் விண்கற்கள் அல்லது எரிகற்கள், அடுக்கு அகங்களுக்காக இலங்கையில் கொட்டப்படும் சீனகற்கள் என்பனவே அங்கிருக்கும் என தூரத்திலிருந்தே துப்பறிபவர்களுக்கு அறிவூட்டுவது - சிக்கல்.

திருமணத்தின் பொழுது அம்மிக்கல்லை மிதித்து கற்பை காட்டுபவர்கள் இங்கும் வந்துவிட்டார்கள். குழந்தைப் பேறு இல்லாதவர்களுக்கு குழவி கல்லைக் கொடுத்து பரிகாரம் தேடியவர்கள் எங்கேயோ போய் விட்டார்கள்.

கருங்கல், சவுக்காரக்கல், கரும்பளிங்குக்கல், காரியக்கல், காவிக்கல், சுண்ணாம்புக்கல், கூழாங்கல், குருவந்தக்கல், மணற்கல், தவளைக்கல், பளிங்குக்கல், பருக்கைக்கல், பருமணற்கல், கருபாக்கங்கல், சானைக்கல், சொறிக்கல், செங்கல், சுக்கான்கல், படிக்கட்டுக்கல், தீத்தட்டிக்கல், திருப்பதிக்கல், வெண்கல், வெட்டுக்கல், சீமைகாவிக்கல், மலடிக்கல், கொடிக்கல், உரைக்கல், தீக்கல், சரளைக்கல், தீத்தப்பிரக்கல் போன்ற பல பாவனையிலிருந்ததை பட்டியலிட பழந்தமிழ் பண்டிதர்கள் தேவையில்லை.

கண்ட கண்ட இடங்களிலெல்லாம் கல்லை வைக்கின்றார்கள். கழுவுகின்றார்கள். பொட்டு வைக்கின்றார்கள். கும்பிடுகின்றார்கள். என கனடா நிக்கலின் (5சதம்) அறிவுடன் அங்கு செல்லும் புதிய தலைமுறைக்கு, கற்களை பொடியாக்கின் மண்ணாவதும், கற்களோடு கற்களை உரசினால் தீப்பொறி பறப்பதும், கல்லைப் பிளக்கையில் நீர் சுரப்பதும், கற்களில் விரிசல் காற்றினால் ஏற்படுவதும், கல் மலையை குடையாகப் பிடித்து கிருஷ்ணர் ஆகாயமாக்கியதும் கல்லில் காணும் பஞ்ச பூதங்களின் மகத்துவம் என இயற்கை வழிபாட்டை இலகுவாக அங்குள்ள புழுதியின் புதல்வர் கூட விபரமாக விளக்கம் சொல்வர்.

கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்ற பழமொழியே பெரும் அழிச்சாட்டியம் என்று கருதுபவர்கள் வேற்று கிரகவாசிகள் அல்ல. எல்லா ஊர்களிலும் கவனிக்கப்படாத ஓர் உருவம் கல் என நம்பும் நமது புதிய தலைமுறையினரே!●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னையா விவேகானந்தன்



# அமைதி தராத அகதி வாழ்வு

18

நான் நலம்
என
ஒரு துண்டுக் கடதாசியை
அனுப்பிவிட்டு
எத்தனை காலம்
என் வாழ்க்கையை ஓட்டுவது?

சொந்த மண்ணில்
ஆழப் புதைந்த
எனது வேர்களை எங்கே தேடுவது?

சிறகு முளைத்த என் கதிரவன் எனக்கு வேண்டும்.
எனது பொழுதுகள் எனக்கு வேண்டும்
பஞ்சாய் மிதந்து
ஓடிப் பிடித்து விளையாடும் என் முகில்களை
நான் பார்க்க வேண்டும்!

சிறு நீர் கழித்தாலே
குழிவிழும் மணல் பரப்பில்
புழுதிவாரி எறியும் காற்றிலும்
அநாயாசமாய்
துள்ளித் திரிந்தேன்.

உமிழ்நீரை துப்புதற்கே
அங்கும் இங்கும் பார்த்து
வாயை விரைவுபடுத்தும்...
ஒரு தேசத்தில்........." பாலமோகன் -
செட்டை கழற்றிய நாங்கள்.

வாழ்வைத் தேடும் வலியைப் பதிவு செய்கின்றார் பாலமோகன்.

அகதி வாழ்க்கையேனும் அமைதியைத் தந்ததா? வெள்ளைத் தோலில் துருத்திய விழிகள் வெறுப்பை உமிழ்ந்தன. அவர்களின் சுகங்களில் பங்குபோட வந்த சுமைகள் நாம். அவர்களின் தூய்மையை அழிக்க வந்த அழுக்குகள் நாம்.
கருப்பா நீ திருடன்!"
தமிலன்.... றவுஸ்!"
என்ற குரல்கள் ஒலிக்கின்றன.

எமது மண்ணின் காற்று புழுதியைச் சுமந்தவர்தான். எனினும் எங்கள் மண்ணில் அதனை நாங்கள் சுதந்திரமாய் அனுபவித்தோம். ஆனால் இந்த அந்நிய மண்ணில் உமிழ்நீரைத் துப்புவதற்கும் எங்களுக்கு உரிமையில்லை. தயங்கித் தயங்கித்தான் அக்கம் பக்கம் பார்த்துத்தான் உமிழ வேண்டியிருக்கிறது.
ஒவ்வொரு கணமும் அகதியாய் உணரும் இந்த வாழ்க்கை என மேலும் குறிப்பிடுகின்றார் கவிஞர்.
புலம் பெயர்ந்த எம் முதற் தலைமுறையினர் பினனாட்களில் வாழ்களத்தின் புறச்சூழலுக்குப் பழக்கப்பட்டவராயினும் அகவுணர்வில் அவர்களால் அதிகம் ஒத்துப்போக முடியவில்லை.

என் பாதங்கள்
மணல் எறிந்து
தலைமீதும் தூவும்
இலேசான பொழுதுகளும்

குதிக்காலால்
மணலை உதைத்து
நண்பனுடன்
விவாதித்து நடந்த
கனத்த பொழுதுகளும்

சப்பாத்துள் எனது பாதங்கள் திணிக்கப்பட்டதால்
தொலைதூரம் போயின.
கால்படா பூமியிதில்
இன்றைய பொழுதையும்
புரிய முயற்சித்து
தோல்வியடைந்தேன்!" பாலமோகன் - செட்டை கழற்றிய நாங்கள்.

மண்ணுக்கும் வெற்றுப் பாதங்களுக்கும் இருந்த பிணைப்பு காலணிகளால் காணாமல் போனதாகக் குறிப்பிடுகின்றார் கவிஞர்.

தாயக மண்ணின் மூலகங்களால் உருக்கொண்ட உயிர்ப் படைப்பான எம் முன்னோர்களின் உயிர் அணுக்கள் ஒவ்வொன்றிலும் 'மண்ணுணர்வு' நெருப்போடிணைந்த வெப்பம் போல இரண்டறக் கலந்தே இருந்தது.
நான்
என் தேசத்திற்குச் செல்வேன்
தேசம் எரிகின்ற போதும்
அது எழுகின்ற போதும்
வாழ்கின்ற
என் தேசத்து மனிதர்களோடு
புன்னகை செய்வேன்."
தமயந்தி - புலம் பெயர்ந்தோர் கவிதைகள்

வாழும் புலத்தில் அகதிக் கூட்டத்தில் சுய முகங்களை இழந்து தன்னியல்பு அழியும் முகமூடி மனிதர்களிடம் அதிகம் பேச எதுவுமில்லை. இப்போதும் இயல்பாய் வாழ்ந்துகொண்டிருக்கும் என் தேசத்து மனிதர்களோடுதான் புன்னகை செய்வேன் என்கிறார் கவிஞர்.

இந்நாட்களில் தலையெடுத்திருக்கும் இரண்டாம் மூன்றாம் தலைமுறையினரோடு ஒப்பிடுகையில்'இருத்தல்' தொடர்பான அடிப்படை உணர்வுகளில் பெரும் வேறுபாடுகளை நாம் அடையாளப்படுத்த முடியும்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## இந்தப் பொடியன் எங்களை என்ன செய்யச் சொல்கிறான்?

கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் 'தமிழர்களின் எதிர்காலம் - குடித்தொகை நோக்கு' என்ற தலைப்பில் கடந்த மாதம் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது.

சமூக மருத்துவர் முரளி வல்லிபுரநாதன் உரையாற்றுகையில் தமிழ்த் தம்பதிகள் ஓரிரு பிள்ளைகளுடன் நிறுத்தி விடாது பல பிள்ளைகளைப் பெறவேண்டும். தவறினால், தமிழினம் வெகுவிரைவில் சிறுபான்மை இனங்களில் கடைசிக்குச் சென்றுவிடும் என்று எச்சரித்தார்.

தமிழர்கள் பல பிள்ளைகளைப் பெற வேண்டிய அவசியத்தை அவர் பல தடவை வலியுறுத்தி உரையாற்றிக் கொண்டிருந்தபோது....

அவையிலிருந்த ஒரு முதியவர் தமக்கு அருகிருந்த ஒரு பத்திரிகையாளரைப் பார்த்து "இந்தப் பொடியன் இப்ப எங்களை என்ன செய்யச் சொல்கிறான்" என்று கேட்டபோது, அந்தக் கேள்வியின் அர்த்தத்தைப் புரிந்த பத்திரிகையாளர் மௌனமாகிவிட்டார்.

*ஆதாரம்: தினக்குரல்- கொழும்பு*

## வீட்டில் தூசு படிவதிலும் பார்க்க 'ஓசி'யிலாவது போகட்டுமே!

நூல் வெளியீட்டு விழாக்களில் சிலர் இரண்டு டாலரை என்வலப்புக்குள் வைத்துவிட்டு புத்தகத்தை எடுத்துச் செல்வது பற்றிய ஒரு எழுத்தாளரின் ஆதங்கத்தை கடந்த மாதம் இங்கு எழுதியிருந்தேன்.

'அது பரவாயில்லை' என்று தெரிவித்து இன்னொரு எழுத்தாளர் சொன்ன கருத்து முக்கியமானது.

"வெளியீட்டு விழாக்களுக்குப் பிறகு புத்தகங்களை எங்கும் விற்க முடியாது. அச்சடித்த புத்தகங்களை வீட்டில் தூசு படிய வைத்து மனைவி, பிள்ளைகளிடம் தினமும் வாங்கும் ஏச்சு மற்றவர்களுக்குத் தெரியாது. புத்தகங்களை 'ஓசி'யில் கொடுத்தாவது ஒப்பேற்றக்கூடிய இடம் வெளியீட்டுவிழாதான்" என்று ஒரே மூச்சில் சொல்லி முடித்தார் அந்த எழுத்தாளர்.

இதிலும் ஒரு 'பெரிய' உண்மை இருப்பதுபோலத்தான் தெரிகின்றது!

## கலைஞரும் ஜெயலலிதாவும் ஒரே ராசிக்காரர் போலும்!

கலைஞர் கருணாநிதியும் முதல்வர் ஜெயலலிதாவும் என்ன ராசியில் பிறந்தார்களோ தெரியாது, இருவரும் சமவேளையில் சொத்துக்குவிப்பு, நிதி மோசடி போன்ற வழக்குகளில் அல்லாடிக் கொண்டிருக்கின்றனர்.

இதிலாவது இருவருக்குமிடையில் ஒரு ஒற்றுமை இருக்கிறது தெரிகிறது. கலைஞரின் மனைவி தயாளு அம்மாள், மகள் கனிமொழி, மருமக்கள் கலாநிதி - தயாநிதி மாறன் சகோதரர்கள் என்று பலர் நீதிமன்றப் படியேறி வருகின்றனர்.

ஜெயலலிதா அவரது தோழி சசிகலா மற்றும் அவரின் உறவினர்கள் மீதான வழக்கின் தீர்ப்பு இந்த மாதம் 20ம் திகதி வழங்கப்படுமென நீதிபதி அதிரடியாக அறிவித்துள்ளார். ஜெயலலிதா குழுவினர் அன்று நீதிமன்றில் கட்டாயம் இருக்க வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஏழரைச் சனியனும் அட்டம வியாழனும் சேர்ந்து இருவரையும் வாட்டி எடுக்கிறது போலத் தெரிகிறது.

## திருப்பதியில் நாற்பது தொன் வெளிநாட்டு நாணயங்கள்

திருப்பதி ஏழுமலையான் கோவில் உண்டியல்களில் நாற்பது தொன் எடையுள்ள வெளிநாட்டு நாணயங்கள் உள்ளன. இவற்றின் பெறுமதி நாற்பது கோடி இந்திய நாணயம்.

சிங்கப்பூர், மலேசிய மற்றும் அமெரிக்க நாணயங்களே இவற்றுள் அதிகமாக இருக்கின்றனவாம். ஏழுமலையானைத் தரிசித்து அருள்பெறச் செல்லும் வெளிநாட்டுப் பக்தர்கள் தத்தமது நாட்டு நாணயங்களை உண்டியலில் போடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இந்த நாணயங்களை ஏலம் விடச் சென்ற போது சில ஏஜன்டுகள் ஐம்பது வீதம் எடை குறைத்து நாணயங்களை வாங்க முயற்சிக்கின்றனர். வெளிநாட்டு நாணயங்களுக்கு நிகராக பல வெளிநாட்டவர்கள் பெருமளவிலான தங்க ஆபரணங்களை உண்டியலில் போட்டுள்ளனராயினும், அவைகளை இனம் காண முடியாதென்று கோவில் நிர்வாகம் சொல்கிறது.

## ஒரேயொரு மா மரத்தில் நாற்பது வகையான பழங்கள்

ஒட்டு மாங்கன்று ஒட்டு ரோஜாச் செடிகளில் இலங்கைத் தமிழர் மிகவும் பிரபல்யமானவர்கள். குடிசைக் கைத்தொழில் போலவே இதனை அவர்கள் செய்வர்.

ஆனால் அமெரிக்கர் ஒருவர் இதில் ஒரு சாதனை புரிந்துள்ளார். புளிப்பான மாமரம் ஒன்றில் நாற்பது வகையான இனிக்கும் மரக் கிளைகளை ஒட்டி, அதிலிருந்து கிடைக்கும் பழங்களைச் சுவைத்துக் கொண்டிருக்கிறார்.

சைராகஸ் பல்கலைக் கழக தாவரவியல் பேராசிரியரான விஞ்ஞானி சாம் வான் என்பவரே இந்தச் சாதனையாளர்.

## 19வது பிறந்தநாள் விழாவில் 'செல்ஃபி'யாக மாறிய யுவதி

லண்டன் பல்கலைக் கழகமொன்றில் கல்வி கற்றுவரும் 'ஷெலி' என்ற பெயருடைய மாணவி, தமது 19வது பிறந்த நாளின்போது தமது பெயரை மாற்றிக் கொள்ள நேர்ந்தது.

கடந்த பல மாதங்களாக இவர் தமது தோற்றத்தைத் தாமே வெவ்வேறு கோணங்களில் படமெடுத்துத் தமது முகநூலில் வெளியிட்டு வந்தார். இதனையடுத்து இவரை இவரது நண்பர்கள் 'செல்ஃபி' (Selfie) என அழைக்க ஆரம்பித்தனர்.

இதனை மகிழ்வோடு ஏற்றுக்கொண்ட ஷெலி, தனது பெயரைச் சட்டபூர்வமாக 'செல்ஃபி' என மாற்றிக் கொண்டார்.

## கடிகார விளம்பரங்களில் எப்போதும் முட்கள் 10:10

கடிகார விளம்பரங்களில் எப்போதும் அதன் முட்கள் 10:10 என்றே இருப்பது வழக்கம். இதற்கு என்ன காரணம்?
இப்படியாக 10:10 என்று முட்களை வைக்கும்போது கடிகார 'டயல்' சிரிப்பது போலக் கவர்ச்சியாக இருப்பதே இதற்குக் காரணமாம். அடேயப்பா!

**உதாசனன்**
**உலா விருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுப்பு தானம்
# Organ Donation

எஸ். ராஜ்மோகன்



## பணிலமாடம் 6

அண்மையில் பிரம்ரனைச் சேர்ந்த இளம் பெண் ஒருவரின் பரிதாப மரணம் எங்களை சற்றுக் கவலை கொள்ள வைத்திருந்தது. Chrissy Girdharry என்ற 29 வயதுடைய பெண் நுரையீரல் மற்றும் ஈரல் உறுப்புகள் தானம் கிடைக்காத காரணத்தால் மரணத்தைத் தழுவியிருந் - தார். தனது மரண வேதனையில் கூட மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருந்து தனது மற்றைய உறுப்புக்களை தானம் செய்து மரணத்திலும் பெருமை சேர்த்துச் சென்றுள்ளார். உறுப்பு தானத்தின் (organ donation) முக்கியத்துவத்தை மக்களுக்கு வலியுறுத்தி அதற்கான பல செயற் - திட்டங்களில் ஈடுபட்ட இவர், தனது மரணத்தின் மூலம் சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்திச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அன்னதானம், இரத்த தானம் என்று எத்தனையோ தானங்களை நாங்கள் செய்திருப்போம். ஆனால் உறுப்பு (organ) மற்றும் இழைய (tissue) தானம் பற்றி அநேகமாகச் சிந்தித்திருக்க - மாட்டோம். மரணத்தின் பின்னர் ஜடமாகி அழிந்து விடப்போகும் எமது உடல் உறுப்புகள் மூலம் இன்னுமொரு உயிரைக் காப்பாற்ற முடியுமென்றால் எதற்காக நாம் உறுப்பு தானம் செய்யக்கூடாது என்ற கேள்வி எழுகின்றது. மரணம் என்பது கூடுதலாக எதிர்பாராமல் எற்படுவது. அந்தத் துயரமான பொழுதுகளில் அழுது கொண்டிருக்கும் எமது உறவுகளுக்கு, இறந்து போன நாம் கொடுக்கும் ஒரு சிறிய ஆறுதலாகக் கூட இது அமைந்துவிடலாம் என்பதும் உண்மை.

ஒன்ராறியோ அரசின் தகவலின்படி, ஒருவர் உறுப்பு மற்றும் இழைய தானம் செய்யும் போது எட்டு உயிர்கள் காப்பாற்றப்படுவ-தாகவும், 75 நோயாளிகளுக்கு மேலதிக சிகிச்சைகள் அளிக்கப்பட முடிவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் ஒன்ராறியோவில் உறுப்பு தானம் செய்பவர்களின் எண்ணிக்கையோ மிகவும் குறைவானதாகவே காணப்படுகின்றது. எங்களில் போதுமானவர்கள் உறுப்பு தானத்திற்குப் பதிவு செய்யாத காரணத்தினால், உறுப்பு மாற்றீடு ஒன்றிற்காகக் காத்திருக்கும் நிலையில், ஒன்ராறியோ மாகாணத்தில் மூன்று நாட்களுக்கு ஒரு நபர் என்ற விகிதத்தில் மரணமடைவதாக திரில்லியம் வாழ்வுக்கான பரிசு வலையமைப்பு (*Trillium Gift of Life* Network) தெரிவிக்கின்றது.

மொத்தமாக 1500 நபர்கள் ஒன்ராறியோவில் மட்டும் உறுப்பு தானம் பெறுவதற்காகக் காத்துக் கொண்டிருக்கின்றார்கள். இது ஒரு பெரிய தொகையாக இருந்த போதும் வயது வந்த ஒன்ராறியோ வாசிகளில் ஆக 22 சதவீத அளவிற்குக் குறைவானவர்களே உறுப்பு மற்றும் இழைய தானத்திற்குப் பதிவு செய்துள்ளமை கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது.

உறுப்பு தானம் என்பது மரணத்தின் பின்னர் தமது உடலிலுள்ள உறுப்பையோ, அல்லது உறுப்புக்களின் ஒரு பகுதியையோ, மரண வாசலில் நின்று கொண்டு பரிதவிக்கும் ஒருவருக்கு தாமாக முன்வந்து உறுப்பு தானம் செய்து அவர்களை மரணத்திலிருந்து காப்பாற்றிப் புதுவாழ்வு கொடுப்பதாகும். வைத்திய நிபுணர்கள் ஓர் உயிரைத் தம்மால் காப்பாற்ற முடியாது என்ற நிலை தோன்றும் போது இந்த உறுப்பு தானம் ஒரு தெரிவாகக் கருதப்படுகின்றது.

கடந்த ஆண்டு ஒன்ராறியோவில் எட்டு மாதங்களில் ஏற்பட்ட மரணங்களில் 93 சத வீதமானவை உறுப்பு தானத்திற்குத் தகுதியுள்ளதாக இருந்த போதிலும் இவர்களில் 52 சத வீதமானவர்களுடைய உறுப்புக்களே, உறுப்பு தானத்திற்குப் பயன்படுத்தப் - பட்டதாக வைத்தியசாலை அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதற்குரிய முக்கிய காரணமாக உறுப்பு தானத்திற்கான முன்பதிவுகள் மேற்கொள்ளப்படாமையே என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எங்களின் வயது மற்றும் ஆரோக்கியம் எப்படி இருந்தாலும் நாம் உறுப்பு அல்லது இழைய தானம் செய்வதற்கான உள்ளார்ந்த தகமையைப் பெற்று விடுகின்றோம். எங்களின் பொறுப்பு, மரணத்தின் பின்னர் எங்களுடைய உறுப்பு தானத்திற்கான அனுமதியை www.beadonor.ca என்ற இணையத்தளத்தில் பதிவு செய்து கொள்வது மட்டுமே. அத்துடன் அநேகமான அரசாங்க அலுவலகங்களுக்குச் செல்லும் போது உறுப்பு தானத்திற்கான பதிவுகளை நேரடியாகவும் மேற்கொள்ள முடியும்.

உறுப்பு தானப் பதிவின் போது கொடுக்கப்படும் எம்மைப் பற்றிய தரவுகள் அனைத்தும் மிகவும் இரகசியமாகப் பேணப்பட்டு வருகின்றன. உறுப்பு தானத்திற்குரிய பதிவுகள் எந்த நேரத்திலும் மாற்றப்படுவதற்கோ அல்லது திரும்பப் பெறுவதற்கோ முடியும்.

உறுப்பு தானம் செய்யும் போது எமது மரணச் சடங்கு ஏற்பாடுகள் எதுவும் பாதிப்படைவதில்லை. அத்துடன் உறுப்பு தானம் செய்வதனால் எமது மறைந்து போன உடலில் எந்தவிதமான வெளித் தோன்றல்களையும் காணமுடியாது.

ஆத்மாவை மனதோடு நேசிக்கப் பழகிய எங்களுக்கு உயிர் காய்ந்து போன உடலின் தேவைகளை விட, இன்னுமொரு உயிருக்கு ஊட்டம் கொடுக்கும் உறுப்பு தானமே வாழ்க்கையின் அதியுச்ச புண்ணியமாக அமைந்துவிடும். உள்ளத்தில் நல்ல உள்ளம் மட்டுமல்ல, உறுப்பு தானம் செய்த உள்ளமும் உறங்காதென்பதைப் புரிந்து கொள்வதற்கு அப்போது நாம் உயிருடன் இருக்கமாட்டோம்.

'உடல் உறுப்புகளைத் தானம் செய்வோம்; உயிர்களை வாழவைப்போம்' ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரா. சம்பந்தன்

# தசாவதாரமும் கூர்ப்புக் கொள்கையும்!

திருமாலை முதற்கடவுளாகக் கொண்ட வைணவ சமயமானது பத்து அவதாரங்களைத் தம் இறைவனின் திருவிளையாடல்களாக எடுத்துக் கூறும். அவையாவன மச்ச அவதாரம் கூர்ம அவதாரம் வாரக அவதாரம் நரசிங்க அவதாரம் வாமண அவதாரம் பரசுராம அவதாரம் பலராம அவதாரம் கிருஷ்ண அவதாரம் இராம அவதாரம் என்ற ஒன்பதுடன் கல்கி அவதாரம் என்ற இன்னும் நிகழாத அவதார தோற்றமும் இணைந்தது ஆகும்.

இந்த அவதாரங்களை உற்று நோக்கும் போது டார்வின் போன்ற மேலைத்தேய விஞ்ஞானிகள் காட்டும் உலகின் கூர்ப்புக் கொள்கையான பரிணாம வளர்ச்சித் தத்துவத்தின் சாயலைக் காணலாம்.

உலகின் முதல் உயிர் நீர் நிலையில் தோன்றி நீரிலும் நிலத்திலும் வாழும் நிலை அடைந்து பின்பு, நிலத்தில் வாழும் உயிரினமாக மாறி பின் விலங்கும் மனித நிலையும் கலந்த நிலையை அடைந்து, இதன் பின்பு மனிதன் என்று ஒத்துக் கொள்ள முடியாத ஒரு விசித்திர உருவு நிலைக்கு வந்து, அதன் பின்பே மனித நிலையை அடைந்திருக்கின்றது என்கிறார்கள் டார்வின் போன்ற விஞ்ஞானிகள்.

இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டு தசாவதாரங்களை நோக்கினால் வியப்பு ஏற்படும். தசாவதாரத்தில் முதல் அவதாரம் மச்சம் எனப்படும் மீன். இது நீரில் தோன்றி நீரில் மட்டுமே வாழ்வது. அடுத்து கூர்ம அவதாரம் எனப்படும் ஆமை. இது நீரிலும் நிலத்திலும் வாழும் தன்மை கொண்டது. இதனால் நீரில் தோன்றிய உயிர் நிலத்துக்கு தொடர்பாகிறது.

இதன்பின் நீருடன் தொடர்பில்லாத நிலத்தில் மட்டுமே வாழும் விலங்கான பன்றி வாரக அவதாரமாகின்றது. அதன்பின் விலங்கு ஆகிய சிங்கமும் நரனாகிய மனிதனும் கலந்த நரசிங்க அவதாரம் அமைகிறது. இது மனிதனிலும் சேராமல் முற்றாக விலங்கிலும் சேராத ஒரு அரைகுறை மாறுபாட்டோடு நின்றுவிடுகின்றது.

இதன் பின்பு குள்ள அல்லது குனிந்த மனித உருவம் வாமண அவதாரமாகக் காட்டப்படுகின்றது. இது மனித உருவம் போல தெரிகின்றது. ஆனால் குள்ள உருவமாக பூரண வளர்ச்சி அடையாத விசித்திர உருவமாகக் காணப்படுகின்றது. அது மனித இனத்துக்கு ஒவ்வாத தருப்பையால் வண்டைக் குத்தும் இழிசெயல் செய்கிறது. அங்கே முழு மனிதனாத் தோற்றம் பெறும் அடுத்த நிலை கொண்டுவரப்படுகிறது.

இதன் பின்பு பரசுராம அவதாரம் வருகின்றது. பரசுராமன் தோற்றத்தில் மனிதனாக இருந்தாலும் மன உணர்விலே சினம் மிக்க மிருக உணர்வோடு மன்னர்களை வேட்டையாடும் கொடூர பாத்திரம். இரத்தம், கொலை இவற்றோடு இருபத்தொரு தலைமுறையாக ஒன்றி நடந்த பாத்திரம். உருவம் மனிதனாகவும் குணம் விலங்கு நிலையிலும் இருந்த ஒரு தன்மையில் இருந்து விடுபட்ட நிலை அடுத்து வருகின்றது.

அதுவே துவாரகையில் கிருஷ்ணனுக்கு அண்ணனாக பிறந்து வாழ்ந்த சுவடே தெரியாமல் சாந்தம் அன்பு நீதி போன்ற எண்ணங்களால் தெளிந்த நீரோடை போலத் திகழ்ந்த பலராமன் அவதாரம். இது முழுமை பெற்ற மனித நிலை.

முழுமையான மனிதநிலை அடைந்த பிறப்பில் இடையிடையே தெய்வத்தன்மை தலை தூக்கும் விதத்தில் கிருஷ்ண அவதாரம் அமைகிறது. வெண்ணெய் திருடி உண்ணும் மனித இயல்புக்கு மத்தியில் கீதை உபதேசிக்கும் தெய்வத் திருவிளையாடல்! மனித நிலையில் இருந்து தெய்வ நிலைக்குக்கு மாறும் உன்னத நிலை.

இதன் பின்பே இராம அவதாரம் வந்திருக்க வேண்டும். ஏனெனில் இராம அவதாரத்தில் மனிதத் தோற்றம் இருந்தாலும் மனிதச் செயற்பாடுகளை காண முடியவில்லை. எல்லாமே மனித சம்பிரதாயங்களுக்கு அப்பாற்பட்ட தெய்வ நடைமுறைகள். அங்கே மனித விருப்பு வெறுப்புகள் புலன் உணர்வுகளை அடக்கிய செய்திகள் சினத்தை அறவே நீக்கிய தெய்வ நிலை என்று மனிதப் பிறவியைக் கடந்த ஒரு தன்மை காணப்படுகிறது.

இதனை நோக்கும் போது வரப்போகும் கல்கி அவதாரம் என்பது மனிதச் சாயல் கொண்ட இராமனை விடவும் பெறுமதியான பூரண தெய்வத் தோற்றப்பாடாகவே இருக்கும் அதிலே மனித சாயல் துளியும் கலந்து இருக்கப் போவதில்லை என்று அறுதியிட்டுக் கூறலாம்.

எனவே கல்கி என்றும் பகவான் என்றும் மானுடர்கள் தங்களை கூறிக் கொண்டு மடம் அமைத்து வாழ முடியுமே ஒழிய அந்தப் பரம் பொருளின் நிழலைக் கூட அவர்களால் மிதிக்க முடியாது என்பதே உண்மையாகும்.

இதிலே இராம அவதாரமும் கிருஷ்ண அவதாரமும் மாறுபட்டு இருந்தாலும் பலராமன் வரையாவது மனித இன வளர்ச்சிக் கொள்கையோடு இந்த அவதார வைப்புகள் இணங்கி வருவதைக் காணலாம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்ச் சிந்தனையும் சித்தரிப்பும் இது என்பதே தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும்! இக் கட்டுரை சிலம்பொலி செல்லப்பனின் கருத்து ஒன்றை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குரு அரவிந்தன்

# உயர்ந்த கோபுரங்கள் 6

மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆட்சியில் உள்ள துபாயில் தான் இன்று உலகிலே உயர்ந்த கோபுரமான புர்ஜ் கலீபா (Burj Khalifa) என்ற கோபுரம் அமைந்திருக்கின்றது. 2,722 அடி உயரமான இந்தக் கட்டிடம் இன்று உல்லாசப் பயணிகள் விரும்பிச் சென்று பார்க்கும் இடங்களில் முக்கியமானதொரு இடமாக இருக்கின்றது. ஏற்கனவே உலகில் இருந்த உயரமான கோபுரங்கள் எல்லாவற்றையும் விட இன்று இதுதான் வானம் தொட்டு நிற்கும் உயரமான கோபுரமாக இருக்கின்றது.



2004ஆம் ஆண்டு இந்தக் கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. தென் கொரியா-வைச் சேர்ந்த சாம்சுங் இஞ்சினியறிங் கம்பனி இந்தக் கட்டிடத்தைக் கட்டும் பொறுப்பை ஏற்றிருந்தது. சுமார் ஐந்து வருட கால இடைவெளியின் பின் இந்தக் கட்டிடத்தின் வேலைகள் 2009ஆம் ஆண்டு முடிவடைந்தது. ஆனாலும் 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4ஆம் திகதி தான் உத்தியோக பூர்வமாக இந்தக் கோபுரம் திறந்து வைக்கப்பட்டது. 163 மாடிகளைக் கொண்ட இந்தக் கோபுரத்திற்கு இரண்டு நிலக்கீழ் வாகனத் தரிப்பிடங்களும் உண்டு. சுமார் 27 ஏக்கர் நிலப்பரப்பின் நடுவே இந்தக் கோபும் அமைந்திருக்கிறது. ஆறு நீர்த் தடாகங்களும் பூந்தோட்டங்களும், பாம் மரங்களும் இந்த நிலப்பரப்பை அழகு செய்கின்றன.

இந்தக் கோபுரத்தின் 124 வது மாடியில் 1483 அடி உயரத்தில் பார்வையாளர்கள் வெளியே நின்று பார்ப்பதற்குரிய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. உலகத்திலேயே அதி உயரத்தில் பார்வையா-ளர்கள் நின்று பார்க்கக் கூடிய மூன்றாவது இடமாக இந்ததட்டு இருக்கின்றது. அதே சமயம் பார்வையாளர்கள் வெளியே நின்று பார்க்கக் கூடிய வகையில் அமைந்ததாக இரண்டாவது இடத்தில் இந்தப் பார்வையாளர் தட்டு இருக்கின்றது. 24,348 யன்னல்கள் இந்தக் கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. 1,290,000 சதுர அடி கண்ணாடிகள் இந்த யன்னல்களுக்காகப் பாவிக்கப் பட்டிருக்கின்றன.

இதுவரை காலமும் அதி உயர்ந்த கோபுரமாக இருந்தவற்றைப் பின்தள்ளிவிட்டு உயர்ந்த கோபுரமாக இன்று முன் நிற்கின்றது துபாய் கோபுரம். கட்டப்படும் போது படிப்படியாக இதன் உயரம் கூடியபோது 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் ரைப்பி 101 என்ற கோபுரத்தைவிட உயர்ந்து நின்றது. 2007ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சியேர்ஸ் கோபுரத்தைவிட உயரமாக நின்றது. 2007 செப்ரெம்பர் மாதம் கனடாவின் சீ.என். கோபுரத்தைவிட உயரமாகக் காட்சி அளித்தது. 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கேவிஎல்வை தொலைக்காட்சி கோபுரத்தை விட உயரமாகக் கட்டப்பட்டது. இப்படியே படிப்படியாக உயர்ந்து இன்று உலகிலே அதி உயர்ந்த கோபுரமாகக் காட்சியளிக்கின்றது.

உலகிலேயே மிக உயரமான கட்டிடம் என்பதைவிட, அதிக மாடிகளைக் கொண்ட இதைக் கவனமாகப் பராமரிப்பது முக்கியமாகும் என்பதைக் கருத்திற் கொண்டு இந்தக் கட்டிடம் அமைக்கப்பட்டிருக்கின்றது. அதி உயரமான இடத்திற்கு ஒரு நொடியில் 18 மீட்டர் வேகத்தில் செல்லும் லிப்டுகள் இங்கே அமைக்கப் - பட்டிருக்கின்றன. உலகிலேயே மிக உயரத்திற்கு அமைக்கப்பட்ட லிப்ட் வசதிகள் இதுவாகத்தான் இருக்கும், இதைவிட முழுக் கட்டிடமும் குளிரூட்டப்பட்டிருக்கின்றது. நகரும் படிக்கட்டுக்கள், லிப்ட் சேவை, குடிநீர் வசதிகள், குளிரூட்டி வசதிகள் என்று பல சேவைகள் இங்கே உள்ளடக்கப் பட்டிருக்கின்றன.

இந்தக் கட்டிடத்தில் பல உணவகங்-களும், பெரிய அங்காடிகளும், வர்த்தக நிறுவனங்களும், ஹோட்டல்களும் அமைக்கப்பட்டுள்ளன. 900 குடியிருப்பு வசதிகளைக் கொண்ட இந்தக் கட்டிடத்தின் 122 வது மாடியில் சிறந்ததொரு உணவு விடுதியும் உண்டு. இதில் 37 மாடிகள் நிறுவனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருப்பது மட்டுமல்ல, விருந்தினர் தங்குவதற்கான 160 அறைகளும் உண்டு.

நீச்சல் தடாகம், நூல் நிலையம், உடற்பயிற்சி நிலையம் என்று பல வசதிகளும் இங்கே கிடைக்கின்றன. இதைவிட சுமார் 3,000 வண்டிகள் தரித்து நிற்கக் கூடிய வசதிகளும் இங்கே உண்டு. இன்னும் ஒரு உயர்ந்த கட்டிடம் மனிதனால் கட்டப்படும் வரை துபாயில் உள்ள 'புர்ஜ் கலீபா' கட்டிடம்தான் உலகிலே உயர்ந்த கோபுரம் என்ற சாதனையைத் தனதாக்கி நிற்கும்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா மூர்த்தி

# கண்டதைச் சொல்கிறேன் 14

சென்ற மாதம் முகப்புத்தகத்தில் பற்பல விவாதங்கள். அவற்றுள் கண்டதை சொல்வதாக இம்முறை நான் குறிப்பிடும் பதிவுகள் சினிமா உலகை அடிப்படையாகக் கொண்டவை. ஈழப்போராட்டத்தால் கொல்லப்பட்ட பாலகனை ஆயுதப் போராளிபோல சித்தரித்ததற்காக 'புலிப்பார்வை' என்ற படம் கடுமையான விவாதத்துள் மாட்டியது. மகிந்தா அரசின் பண உதவியுடன் தமிழகத்தில் 'கத்தி' என்ற படம் தயாரிக்கப்படுவதாக இன்னொரு விவாதம் நடந்தது. வேறொரு விவாதம் தமிழகத்தில் அரசியல் நடத்தும் சினிமா இயக்குனர் ஒருவரைக் கடுமையாக சாடி சூடு பறந்தது. இந்த முகப்புத்தக விவாதங்களின் அடிநாதம் ஈழ அரசியல்தான் என்றாலும் அதன் உச்சஸ்தாயி சினிமாவேதான். அவை ஒருபுறமிருக்க....

இன்னொரு 'சினிமாக்காரனு'க்காக கருத்துப்பகிர்வில் நானும் ஈடுபட்டதைக் குறித்து இம்முறை இப்பகுதியில் எழுதலாம் என்று நினைக்கிறேன். அந்த சினிமாக்காரன்: ஹொலிவூட்டின் சிறந்த நடிகர்களில் ஒருவரான ரொபின் வில்லியம்ஸ்! 1988இல் ஒஸ்கார் விருது பெற்றவர். ரொபின் வில்லியம்ஸ் கடந்தமாதம் தற்கொலை செய்து கொண்டார். அமரிக்க அதிபர் ஒபாமா உட்பட பலரும் அவரது மரணத்தைக் கேள்வியுற்று அதிர்ந்து போயினர். அனுதாபம் தெரிவித்தனர். ரொபின் வில்லியம்ஸின் மரணச் செய்தி தமிழ் முகப்புத்தக உலகையும் ஆக்கிரமித்திருந்தது.

தமிழ்சினிமா ரசிகர்களுக்கும் ரொபின் வில்லியம்ஸ் ஒருவகையில் மிகவும் பரிச்சியமானவராக இருந்தார். கமல்ஹாசன் நடித்த 'அவ்வை சண்முகி' என்ற திரைப்படம் ரொபின் வில்லியம்ஸ் நடித்து வெளிவந்த 'மிஸிஸ் டவுட்பயர்' என்ற படத்தின் தமிழ் வடிவம். ரொபின் வில்லியம்ஸின் மறைவையிட்டு நடிகர் கமல்ஹாசன் அனுதாபச் செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தார். அந்த அனுதாபச் செய்தியில் *'அவரது திறமைக்காக அவரை எனக்குப் பிடிக்கும். செய்திகளில் வருவதுபோல, அவர் உண்மையில் தற்கொலை செய்து கொண்டிருந்தால், தனது முடிவு தேதிக்கு முன்பே வாழ்க்கையை முடித்துக் கொண்ட அவரை வெறுக்கிறேன். அவரைப் போன்ற திறமையானவர்களிடம் நான் இந்த முடிவை எதிர்ப்பார்க்கவில்லை..."* என கமல்ஹாசன் குறிப்பிட்டிருந்தார்.

*அந்த அறிக்கையைப் படித்த முகப்புத்தக நண்பர் ஒருவர் 'எப்போதும் கொப்பியடிக்கும் கமல்ஹாசன் இதையும் (தற்கொலையை) கொப்பியடித்துவிடுவாரோ என்று நான் பயந்துகொண்டிருந்தேன்... நல்லவேளை!.. யப்பா... ம்.. இது சோகப் பெருமூச்சு.."* என தன் ஆதங்கத்தை கவலையுடன் வேடிக்கையாக முகப்புத்தகத்தில் குறிப்பிட்டிருந்தார். *அதற்கு இன்னொரு முகப்புத்தக நண்பர் "மிஸ்ஸ் டவுட்பயர்' மற்றும் 'பட்ச் அடம்ஸ்' ஆகிய இரண்டு ஹாலிவூட் படங்களும் சமூகப் பொறுப்புணர்வுள்ள திரைப்படங்கள். ஆனால் அதைப் பிரதிபண்ணி எடுத்த இரண்டு தமிழ் திரைப்படங்களும் மலிவான ரசனை கொண்ட வியாபாரத் திரைப்படங்கள். ரொபின் வில்லியம்ஸ் தற்கொலை செய்து கொண்டதை யாரும் விரும்பவில்லை. அதற்காக அவரை வெறுக்க முடியாது. மாறாகப் புரிந்து கொள்ளவே முயற்சிக்க வேண்டும். அவரது திரைப்படங்களையே புரிந்து கொள்ளாத கமல் அவரையா புரிந்து கொள்ளப் போகின்றார்...."* என்று பதிவிட்டிருந்தார்.

இதில் 'மலிவான ரசனை' என்ற பதம் எனக்கு ஏற்புடையதாக தெரியவில்லை. எனவே ஒரு எதிர்க்குரலாக 'மலிவான ரசனை' என்பதை மறுதலித்து கீழ்காணும் வரிகளை பதிலுக்குப் பதிலாக நான் பதிவிட்டேன். அதைத்தான் இம்முறை உங்களுடனும் பகிர்ந்து கொள்கிறேன்.

*யோசித்துப் பாருங்கள். எல்லா ஆங்கிலப்படத்தையும் அப்படியே தமிழில் திருப்பி எடுக்க முடியுமா? இல்லையே. அதற்கு திரைக்கதையில் மாற்றம் நிச்சயம் அவசியமாகிறது. காரணம் மேல்நாட்டார் திரைக்கதைகளை அமைக்கும்போது முன்னெடுக்கும் நோக்கங்கள் வேறு. தமிழ்ப்படங்கள் எடுப்பவர்கள் முன்னெடுக்கும் நோக்கங்கள் வேறு. மேலும் தமிழ்சினிமாவுக்கான திரைக்கதை அமைக்கப்படும்போது'பாடல்கள்,'சண்டை, படத்தின் நடுவே இடைவேளை,'குடும்பப் பெறுமானம்"என பல உள்ளடக்கங்களும்'பிறமாநில சந்தை,"வெளிநாட்டுச் சந்தை,'திரையரங்கைத் தேடி டிக்கட் வாங்கி வரும் ரசிகர்கள் என தமது ரசிகர்கள் குறித்த வரையறுப்பும் ஒரே நேரத்தில் கவனத்தில் கொள்ளப்படுகிறது. எப்போதுமே வேற்று மொழிப் படமொன்று தமிழில் எடுக்கப்படும்போது தென்னிந்திய ரசிகர்களுக்காகவென ஒரிஜினல் படத்துக் காட்சிகளில் சிலவற்றை மாற்றுவார்கள்.'தமிழ் ரசிகர்களுக்காக'நேட்டிவிட்டி என்றெல்லாம் சொல்லி கதையமைப்பை மாற்றுவது படத்தின் வெற்றிக்குத் தேவையானதும்கூட. அதை 'மலிவான ரசனை என்பது தேவையற்றதொரு சொற்பிரயோகம்.*

*'உயர் ரசனை' என்பது தெளிவாக வரையறுக்கப்படக் கூடியது. ஆனால் 'மலிவான ரசனை' என்ன என்பது யாராலும் சுலபத்தில் வரையறுக்கப்பட முடியாதது. உண்மையில் மலிவான ரசனை என்ன என்பதை'அதைச் சொல்பவர் யார் என்பதை வைத்துத்தான் புரிந்து கொள்ள முடிகிறது. யோசித்துப் பாருங்கள். 'ப்ளூபிலிம் எடுப்பவர் மலிவான ரசனை கொண்டவர் என்று சொல்பவர்கள் இருப்பார்கள். இருக்கட்டும். ஆனால் காமசாத்திரம் மலிவான ரசனை என்போமா? இல்லைத்தானே... இரண்டினதும் நோக்கம் ஒன்றாகத் தெரிந்தாலும் இங்கு 'உயர்ரசனை"க்கு நாம் கொடுக்கும் வரைவிலக்கணம்தான்'எது மலிவு" அல்லது எது உயர்வு என்பதைத் தீர்மானிக்க வைக்கிறது.*

*உண்மையில் 'அவ்வை சண்முகி' 'தெனாலி', 'மகளிர்மட்டும்' போன்ற பல நகைச்சுவைத் திரைப்படங்கள் ஆங்கிலப்படங்களின் திரைக்கதையை அடியொற்றித் தரப்பட்டவை. கமல்ஹாசன் மட்டுமல்ல நம் பாலுமகேந்திராவும் தன் படங்களை ஆங்கிலப்படங்களில் இருந்தே உருவியதாக பலர் குற்றம் சாட்டுவதையும் கவனிக்கிறோம். பாலுமகேந்திராவையும் 'மலிவான ரசனைக்காரன்" எனச் சொல்பவர்கள் உண்டு. ஆகவே 'மலிவான ரசனை' என்ற சொற்பதத்தை நான் ஏற்கமாட்டேன். அதுபோக.. வார்த்தைகளைக் கண்டும் நாம் மிரண்டுபோய்விடக் கூடாது. தற்கொலை செய்து கொண்ட காதலனின் உடலைப் பார்த்து 'ஐ ஹேற் யூ... ஐ ஹேற் யூ... (நான் உன்னை வெறுக்கிறேன்... நான் உன்னை வெறுக்கிறேன்.) என்று அழுத காதலியை ஒரு மரண வீட்டில் நான் கண்டேன். உண்மையில் அவள் அவனை வெறுக்கிறாளா? இல்லையே.. அவளின் அந்த வார்த்தைப் பிரயோகத்தை நான் எப்படிப் புரிந்து கொள்கிறேனோ அப்படித்தான் கமல்ஹாஸனின் 'வெறுக்கிறேன்' என்ற சொற்பிரயோகத்தையும் நான் புரிந்து கொள்கிறேன். ஆம். அந்தக் காதல்வசப்பட்ட காதலியின் நிலையில்தான் நடிகர் கமல்ஹாஸன் இருக்கிறார் என்பதை மட்டுமே நான் புரிந்து கொள்கிறேன்..."* என்று நீளமாக எழுதியிருந்தேன்.

உண்மையில்'எது சரி எது தவறு" என்பதெல்லாம் நாம் அவற்றைப் பார்க்கும் பார்வையைப் பொறுத்தன்றோ. எனக்குச் சரியாகத் தெரிவது இன்னொருவருக்கு தவறாகத் தெரிந்தால் அது யார் குற்றம்?●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பதவியிலிருந்த நவநீதம் பிள்ளைக்கு பணி ஓய்வு மதிப்பளிப்பு









ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணயாளராகக் கடந்த ஆறு ஆண்டுகளாகப் பணியாற்றிய நவநீதம் பிள்ளை கடந்த மாதம் 31ம் திகதியுடன் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். அவரது பணி ஓய்வுக்கு மதிப்பளிக்கும் சிறப்பு நிகழ்ச்சியொன்றினை ஐரோப்பாவிலுள்ள மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள் கடந்த மாத முற்பகுதியில் நடத்தின. இதில் பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, பிரித்தானியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பதினைத்து ஈழத்தமிழ் பிரமுகர்கள் கலந்து கொண்டு தங்கள் வாழ்த்துகளை அவருக்குத் தெரிவித்தனர். தமிழர் பண்பாட்டுக்கமைய அவருக்குத் தமிழர் பிரதிநிதிகள் பட்டாடைகள் போர்த்து சேலை அணிவித்து தங்கள் அன்பைத் தெரிவித்தது சிறப்பு நிகழ்ச்சியாக இருந்தது. தமக்களிக்கப்பட்ட மதிப்பளிப்பை மகிழ்வோடு ஏற்றுக்கொண்ட நவநீதம் பிள்ளை இலங்கை தொடர்பாகக் கருத்துக் கூறுகையில் புதிய மனித உரிமைகள் ஆணையாளராகத் தம்முடன் பணியாற்றய ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதால் அவருடன் தமிழர்கள் இணைந்து பணியாற்ற முடியுமென்று தெரிவித்தோடு, சர்வதேச விசாரணைக்குத் தேவையான ஆவணங்களை வழங்கி ஆதரவளிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் உற்சவம் முடிவடைந்த மறுநாள்
# வெள்ளை வேட்டியில் இராணுவக் காவடிகள்

நல்லூர் பூங்காவனம் கடந்த மாதம் 26ம் திகதி முடிவுற்ற மறுநாள் வழக்கத்துக்கு மாறான ஒரு விநோதமான நிகழ்ச்சி இங்கு இடம்பெற்றது. ஆயிரத்துக்கும் அதிகமான சிறீலங்கா ராணுவத்தினர் நல்லூர் சங்கிலியன் தோப்பிலிருந்து வெள்ளை வேட்டி சகிதம் அணிவகுத்து நிற்க, குறிப்பிட்ட சில ராணுவத்தினர் காவடி எடுத்து ஆலயத்துக்குச் சென்றனர். யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா இந்த ராணுவக் காவடிகளுக்குத் தலைமை தாங்கிச் சென்றார். கடந்த வருடங்களில் நல்லூர் தேர்த் திருவிழாவின்போது உலங்கு வானூர்தியில் ராணுவத்தினர் மலர் தூவி வந்தனர். ஆனால் இந்த வருடம் ஆலய நிர்வாகம் அதனை நிறுத்திவிட்டது. இதனால் ஏமாற்றமடைந்த ராணுவ நிர்வாகம் இம்முறை காவடி எடுத்து தமது நிர்வாகமே குடாநாட்டில் நடைபெறுகின்றது என்பதைக் காட்டியதாக குடாநாட்டு மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். முன்வரிசையில் சென்ற ராணுவ அதிகாரிகள் தங்கள் படைப் பிரிவுக் கொடிகளை தட்டத்தில் எடுத்துச் சென்று ஆலயத்தில் பூஜைகள் செய்து அசீர்வாதம் பெற்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.









# வன்னியில் தமிழ் மன்னன் பண்டாரவன்னியன் நினைவு நிகழ்வு





வன்னியை அரசோச்சிய மன்னன் பண்டாரவன்னியன் முல்லைத்தீவை வெற்றிகொண்ட 211வது ஆண்டு நினைவு வைபவம் கடந்த மாதம் நடைபெற்றது. வவுனியாவில் அமைந்துள்ள பண்டார வன்னியன் சிலைக்கு சமூகப் பிரமுகர்கள் மலர்மாலை சூட்டி வணக்கம் செலுத்தினர். பெருந்தொகையான மக்கள் விருப்புடன் பங்கேற்ற இந்நிகழ்வில் பண்டாரவன்னியன் வேடமணிந்த வீதி ஊர்வலம் குடை கொடி பதாதைகளுடன் சிறப்பு நிகழ்ச்சியாக அமைந்து பலரது கவனத்தையும் ஈர்த்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்திபூர்வமாக நிகழ்ந்தேறிய நல்லூர் வருடாந்த மகோற்சவம்










ஈழநல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் கடந்த மாதம் முதலாம் திகதி முதல் 25ம் திகதி வரை நடைபெற்றது. முன்னைய ஆண்டுகளைப் போன்று நேரக்கட்டுப்பாட்டுடன், பக்தி பூர்வமாகப் பல லட்சம் மக்கள் கலந்துகொண்டதாக திருவிழாக்கள் நிகழ்ந்தேறின. மஞ்சம், கைலாசவாகனம், சப்பரம், தேர் உட்பட சில முக்கிய திருவிழாக்களில் சுவாமி எழுந்தருளித் திருவுலா வரும்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




BRMC TORONTO

## Brimley Road Medical Centre

# WALK-IN CLINIC & FAMILY PRACTICE

புதிய சேவைகள்
- இதய மருத்துவச் சேவை (Heart Clinic - Echo, Stress Test, Holter & Consultation)
- சிறப்பு மருத்துவர்களின் சேவை (Specialists)
- புதிய பெண் குடும்ப மருத்துவரின் சேவை

✓ புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள்.
✓ ஆண், பெண் குடும்ப மருத்துவர்களுடன் 7 நாட்களும் சேவை.

Dr. சாந்தி முத்துலிங்கம், MD, CCFP
Dr. உதயன் சோமசுந்தரம், MD, CCFP
Dr. சுபாதினி செந்தில் மோகன், MD, CCFP
Dr. நஸ்ரத் கான், MD, CCFP

| | |
|---|---|
| MON - THU | 9:00 - 7:00 |
| FRIDAY | 9:00 - 5:00 |
| SAT & SUN | 9:00 - 2:00 |

- ஆய்வுகூடச் சேவை (Life Lab)
- மருந்தகச் சேவை (IDA Pharmacy)
- இயன் மருத்துவச் சேவை (Brimley Physiotherapy)

*'We speak your language'*

**416.412.3333**

**3333 Brimley Road**
Scarborough, ON M1V 2J7
(Between **Steeles** & **McNicoll**)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'குறமகள்' வள்ளிநாயகி இராமலிங்கம்

# எங்கள் இந்திரப் பிரஸ்தம்

சமீப காலத்தில் தொலைக்காட்சிகள் சிலவற்றில் இந்துக்களின் மிகப் பெரிய இதிகாசமான மகாபாரதம் ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகின்றது.

கற்றோர் மற்றோர் என எல்லா வகை மனிதருடைய உள்ளத்திலும் தாக்கம் விளைவித்துக் கொண்டிருக்கும் மகாபாரதம் மக்கள் சிந்தனைக்கு விருந்தாகி வருகிறது.

ஒப்பீட்டுச் சிந்தனையில் எழுந்த சில கருத்துகள் இங்கே வைக்கப்பட்டு வருகின்றன.

யுகத் தொடக்கங்கள் அழிவுகள் என்பன சில இலக்கியங்கள் தோன்றவும் யுகபுருஷர்கள் ஸ்தானம் பெறவும் வழிவகுக்கின்றன.

உயிரினங்கள் தோன்றிய காலந்தொட்டு பூமியின் வாழ்வு முறை நான்கு யுகங்களாகக் கணிக்கப்பட்டு வருகின்றது. அவ்வவ் யுகங்களின் அவதார புருஷர்கள் தெய்வாம்சம் பொருந்தியவர்களாகக் கணிக்கப்பட்டு வணங்கப்பட்டு வருகின்றனர்.

கிருதயுகம் திரேதாயுகம் துவாபரயுகம் கலியுகம் என வகுக்கப்பட்டு வந்திருக்கின்றது. தெய்வத்தன்மை பொருந்தி அறத்தோடு வாழ்ந்த மக்கள் கிருதயுகத்தில் வாழ்ந்து வந்தனர் எனக் கூறப்படுகிறது. பிற உயிர்களுக்கு தீங்கு விளைவிக்காதவர்களாக மரத்தால் விழுந்த கனிகளையும் பழுத்து விழுந்த இலைகளையும் உதிர்ந்து விழுந்த தானியங்களையும் உண்பவர்களாக சத்திய சந்தர்களாக முழுமையான ஆன்மிகம் பயின்றவர்களாக வாழ்ந்தார்களாம். இவர்கள் முனிவர்கள், ரிஷிகள் என அழைக்கப்பட்டு நட்சத்திர அந்தஸ்து கொடுக்கப்பட்டு வந்தது. இவ்வகையில் சப்தரிஷி மண்டலம் உதாரணமாக்கப்பட்டு வந்தது.

காலம் போகப்போக அறநெறி குறைந்து மக்கள் மனதில் அகங்காரம் ஆணவம் குடிகொள்ளத் தொடங்கியதும் கிருதாயுகத்திலிருந்து திரேதாயுகம் தொடங்குகிறது. எத்தனை ஆன்மீக வயத்தனாயினும் சிற்றின்பம் விழைபவரும், பிறன்மனை நயந்தவர்களும் தோன்றத் தொடங்கினர். இராவணன், வாலி, காமவல்லியான சூர்ப்பனகை போன்றோரினாலும் தசரதன் போன்ற பல மனைவியரைக் கொண்டவர்களாலும் இராம இராவண யுத்தம் ஏற்பட்டது. அந்தப் போரில் பெரும் அழிவு ஏற்பட்டு ஏகபத்தினி விரதனான இராமபிரான் யுகபுருஷனாகக் கணிக்கப்பட்டு இறைவன் அந்தஸ்தைப் பெற்றார்.

துவாபரயுகத்தில் super intuision என்று சொல்லப்படும் எதிர்காலத்தை உணரக்கூடிய ஒரு குழந்தையாகப் பிறந்து கிருஷ்ணர் யாதவ குலத்துக்குப் பெருமை சேர்க்கும் வண்ணம் லீலைகள் நடத்தி குருவம்சம் என்னும் அரச குலத்தையே அழித்து, மக்கள் யுகத்துக்கு வழிவகுத்தார். அதனால் கிருஷ்ண பரமாத்மா எனும் தெய்வமாகப் போற்றப்பட்டார்.

பதினெட்டு நாள் போரில் அனைத்தும் அழிந்துபோக, அபிமன்யுவின் புதல்வன் பரீட்சித்து மகாராசுவுடன் கலியுகம் தொடங்கியுள்ளது. இதில் பஞ்சமாபாதகங்களையும் செய்பவனாக மனிதன் படைக்கப்படுகிறான். இதன் யுகபுருஷன் யாராக இருக்கக்கூடும். இதன்பின் வரும் யுகத்துக்கு கிருதயுகத்தின் தன்மை இருக்கும் எனக் கூறப்படுகிறது. ஆன்மீக அவதார புருஷனாக விளங்கியவர் அதற்கு சத்யயுகம் எனப் பெயரும் சூட்டியிருக்கிறார்.

இந்த யுகங்கள் யாவற்றிலும் இலங்கை சம்பந்தப்பட்டிருப்பதும் தெரிய வருகிறது.

இவ்வகையான பிரிப்பு அறிவியல் அறிஞர்கள் சிலர் 'கூர்ப்புக் கொள்கை''யோடு சம்பந்தப்படுத்தியுள்ளனர். அதாவது அமீபா எனும் அணுவிலிருந்து வளர்ந்த உயிரினம் கடலிலிருந்து தரைக்கு வந்ததாகவும் காத்தற் கடவுள் அந்தந்த உருவம் எடுத்திருந்தாரெனவும் மீனவதாரம் கூர்மாவதாரம் நரசிம்மாவதாரம் என்பது ஓரங்குட்டான் குரங்கு வகை எனவும், ராமாவதாரம் அறநெறி சார்ந்த மனிதாவதாரம் எனவும் புத்திக்கூர்மையுடைய Extra sensitive intuision எதிர்காலத்தை உணரக்கூடிய மூளையையுடையவர் கிருஷ்ணர் எனும் கிருஷ்ணாவதாரம் எனவும் கூறப்படுகிறது.

இதுபோலவே கலியுகத்தின் யுகபுருஷன் யார் என்பது இனித்தான் தெரியவரும். உலகமெலாம் பரந்து வாழும் தமிழினத்தின் ஒருவராகத்தான் இருக்க முடியும்.

கச்சதேவயானிக்கு அசுர குருவான சுக்கிராச்சாரியார் அருளிய விஷ்ணு புராணத்தில் எதிர்காலத்தில் நிகழப்போகும் கிருஷ்ணாவதாரம் பற்றிய முழுவிபரமும் காணப்படுகிறதாம். எதிர்காலம் கூறக்கூடிய சுகர் போன்ற தவசிரேட்டர்கள் எழுதி வைத்துப் போயிருக்கிறார்கள்.

இவ்வகையில் எழுந்ததுதான் 'மகாபாரதம்' எனும் இதிகாசம். துவாபரயுகத்தில் நடந்த கதையைக் கலியுக ஆரம்பத்தில் அபிமன்யுவின் புதல்வன் பரீட்சித்து மகாராசாவின் ஆதரவில் எழுதப்பட்டதே மகாபாரதம் எனும் இந்த இதிகாசமாகும்.

இந்த இதிகாசம் எவ்வாறு நடைபெற்றது என்ற தத்துவங்கள் செயற்பாடுகள் என்பன அதே வாய்ப்பாட்டு முறையில் நடைபெற்று வருவதை நாம் காணலாம்.

உலகத்திலுள்ள நாடுகள் அனைத்திலும் ஏற்பட்டிருக்கும் பிரச்சனைகள், சர்ச்சைகள், போர்கள் என்பன அதே மகாபாரதம் கூறும் வகையிலேயே நடைபெற்று வருவதை நாம் காணலாம். எமது இலங்கையையே நாம் உதாரணத்துக்கு எடுத்து ஒப்பிட்டு ஆராய்ந்து பார்க்கலாம்.

பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை அலட்சியம் செய்வது, உரிமைகளைப் பறிப்பது, ஈற்றில் அடிமைகளாக்குவது, அதுகண்டு சிறுபான்மையினர் கொதித்தெழுவது, சிறிது சிறிதாக சுதந்திர எண்ணத்தை வளர்ப்பதும், சிறுசிறு அமைதிப் போராட்டமாகி பின் ஆயுதப் போராட்டமாக மாறிவிடுவது. இவை நாடுகள் பூராவும் பரந்துபட்ட நிகழ்ச்சிகளாகி விட்டன.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**

**(416) 266-5161**


(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7

Scarborough, Ontario M1K 5JB





## Computek College

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

Est. 1991

www.computek.edu

We provide assistance for Second Career funded Applicants. E.I receiving /received, Maternity benefits received, WSIB, Ontario Works clients & New Immigrants welcome

**SECOND CAREER**

**You maybe eligible upto $28,000 to pay for:**

Living Expenses
Transportation
ChildCare
Books
Tuition and other

**Diploma Programs**

- Early Childcare Asst (ECA)
- Personal Support Worker (PSW)
- Medical Office Admin (MOA)
- Computerized Accounting
- Business Administration
- Application Development
- Network Engineering
- Enterprise Network Engineering

| Markham Campus | Scarborough Campus | Toronto Campus |
|---|---|---|
| Markham / Steeles | Kennedy / Sheppard | Kennedy / Eglinton |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |

Not all the courses are available at all the locations




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரன்

# என்றுமுள்ள செந்தமிழ் 80



## தாமரைக் கண்ணனே தாலேலோ!

திருவாய்மொழி உட்பட, திவ்யப் பிரபந்தத் தொகுப்பில் உள்ள எல்லாப் பாடல்களும் (பாசுரங்களும்) 'பத்து' என்று சொல்லப் படும் பதிகங்களாக வகைப் படுத்தப் பட்டுள்ளன. எல்லாப் பாடல்களும் திருமால் பக்தியின் பல பரிமாணங்களைப் பேசுகின்றன. இருந்தும் ஒவ்வொரு 'பத்து' க்கும் ஒரு குறிப்பிட்ட கருப்பொருள் (theme) உள்ளது. பத்தில் உள்ள அனைத்துப் பாடல்களும் அந்தக் குறிப்பிட்ட கருப்பொருளைச் சுற்றியே இருக்கும். முழுமையாக அந்தக் கருப்பொருள் தரும் அனுபவத்தில் திளைக்க இது வகை செய்கிறது.

பெரியாழ்வார் திருமொழியின் முதல் பத்தின் மூன்றாம் திருமொழி'மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி' என்று தொடங்கும் பத்துப் பாடல்களைக் கொண்டது.

ஒரு குழந்தைக்குத் தாயாக இருப்பது எளிது. தந்தையாக இருப்பது மிகக் கடினம். ஏன் ?
தாய் என்பது இயற்கையாக இருப்பது. ஒரு தாய் தன் பிள்ளையை பத்து மாதம் வயிற்றில் சுமக்கிறாள். பின், தன் (அந்தக் காலத்துத் தாய்) குருதியைப் பாலாக்கி பிள்ளைக்குத் தருகிறாள். அவளுக்கும் குழந்தைக்கும் உள்ள தொடர்பு உயிர் சார்ந்தது, ஊன் சார்ந்த்து, உடல் சார்ந்தது.

தந்தை அப்படி அல்ல. தந்தைக்கும் பிள்ளைக்கும் ஒரு தொடர்பும் இல்லை. ஒரு தந்தை பிள்ளை மேல் வைக்கும் பாசம் மிகக் கடினமானது. அவன் மிகுந்த முயற்சி செய்ய வேண்டும். தாயின் அன்பைக் காட்டிலும் தந்தையின் அன்பு மிக மிக உயர்வானது.

பெரியாழ்வார் தன்னை கண்ணனின் தாயாகப் பாவனை செய்து பாடல்கள் எழுதி இருக்கிறார். அவ்வளவும் இனிமையான பாடல்கள்.

பெரியாழ்வாரின் திருமொழியில் எதைக் கொள்வது எதைத் தள்ளுவது என்பது பெரிய சிக்கலாக இருக்கிறது. எல்லாமே பால், தெளிதேன், பாகு, பருப்பு என இந்த நான்கும் கலந்த பண்டம் போல் தித்திக்கின்றன.

கண்ணனது திருமேனி அழகு எப்படி இருக்கிறது?
முத்தும் மணியும் வயிரமும் நன்பொன்னும்
தத்திப் பதித்துத் தலைப்பெய்தாற் போல் எங்கும்
பத்து விரலும் மணிவண்ணன் பாதங்கள்
ஒத்திட்டு இருந்தவா காணீரே
ஒண்ணுதலீர் வந்து காணீரே! ( திருமொழி 3 - பாடல் 24)

முத்தும் - முத்துக்களையும்
மணியும் - இரத்தினங்களையும்
வயிரமும் - வஜ்ரங்களையும்
நல்பொன்னும் - மாற்றுயர்ந்த பொன்னையும்
தத்திப்பதித்து - மாறிமாறிப்பதித்து
தலைப்பெய்தாற்போல் - சேர்த்தாற்போலே
எங்கும் - திருமேனியெங்கும்
மணிவண்ணன் - மணிபோன்ற வர்ணத்தையுடையனான கண்ணனுடைய
பாதங்கள் - திருவடிகளிலுள்ள
பத்து விரலும் - விரல் பத்தும்
ஒத்திட்டிருந்ஆ - ஒன்றோடொன்றொத்து அமைந்திருக்கும்படியை காணீர்!
ஒன் நுதலீர் - ஒளிபொருந்திய நெற்றியையுடையீர்காள்! வந்து காணீர்!

இந்தப் பாடலுக்கு மணிப்பிரவாள நடையில் ஸ்ரீ காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார் விளக்க உரை எழுதியுள்ளார்.

முதலடியில் சில இரத்னங்களைச் சொன்னது நவரத்னங்களுக்கும் உபலக்ஷணம். கோமேதகம், நீலம், பவழம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்பன நவரத்தினங்களாம். கால்களுக்கு இடுகின்ற செம்பஞ்சு மருதாணி என்பனபோல ஸ்ரீகிருஷ்ணனுடைய பாதங்களில் ஒன்பது விரல்களுக்கு நவரத்ன வர்ணத்தையும் மற்றொரு விரலுக்குப் பொன்னிறத்தையும் யசோதை இட்டு'என் மணிவண்ணனுடைய பாதங்களில் பத்து விரலும் - நவரத்னங்களையும் நல்ல பொன்னையும் ஒளிவிளங்க மாறிமாறிப் பதித்து வைத்தாற்போலச் சேர்ந்தனவாய் லக்ஷணங்களில் குறையொன்றுமில்லாமலிருப்பதை வந்து பாருங்கள் என்கிறாள்.

பொதுவாக எல்லோரும் இறைவனிடம் பொன் வேண்டும் பொருள் வேண்டும் பெண் வேண்டும் நல்ல உடல்நலம் வேண்டும் என்று கேட்பார்கள்.

இரட்டைப் புலவர்கள் போல் சிலர் இறைவனைத் திட்டவும் செய்வார்கள். உனக்கு எவ்வளவு பூசை செய்கிறேன், அர்ச்சனை செய்கிறேன், அபிசேகம் செய்கிறேன் எல்லாம் செய்தேன், என்னை ஏன் இப்படி சோதிக்கிறாய், உனக்கு கண் இல்லையா, காது இல்லையா உன் மனம் என்ன கல்லா என்று வைப்பவர்களும் உண்டு.

இறைவன் உண்டென்பார், இல்லை என்பார் நமக்கில்லை கடவுள் கவலை என்று என்னைப் போல் இருப்பாரும் உண்டு.

இந்தப் பாடல்களைப் படிப்பதால் தமிழின் சுவையை விட வேறு என்ன பயன்?
வானவெளியில் சிறகடித்துப் பறக்கும் சோலைக் கிளி, அழகிய மயில், பாடும் குயில், கடிமலர் வண்டு, காதோரம் கவிதை பாடும் தென்றல், காலோரம் கதை பேசும் கடல் அலை, பால் போல் நிலவு, விரல் பிடிக்கும் பச்சை குழந்தையின் பிஞ்சுக் கைகள், வாசம் வீசும் தாமரை மலர்.. .....இவற்றை எல்லாம் பார்ப்பதால் என்ன பயனோ அதே பயன்தான்.

இறைவனை தொட்டிலில் இட்டு தாலாட்டித் தூங்கப் பண்ணுகிறார் ஆழ்வார்....இறைவனுக்கு தாய் இல்லை என்ற குறையை போக்குகிறார்... இந்தப் பத்துப் பாடல்களில் திருவாய்ப்பாடியில் எம்பெருமான் கண்ணன் பிறந்திருந்த போது அவனை தாலேலோ பாடி யசோதை தாலாட்டியதைக் கூறுகிறார் பெரியாழ்வார்.

மாணிக்கம் கட்டி வயிரம் இடை கட்டி
ஆணிப்பொன்னால் செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணியுனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக்குறளனே தாலேலோ!
வையம் அளந்தானே தாலேலோ! (3ஆம் திருமொழி - பாடல் 44)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கங்களை இருபுறமும் கட்டி இடையில் வயிரங்களைக் கட்டி மாற்றில்லாத ஆணிப்பொன்னால் செய்த அழகிய சிறிய தொட்டிலை மிகவும் விருப்பமுடன் பிரமன் உனக்காகத் தந்தான்! உன்னுடைய உடைமைகளை இரந்து பெறுவதற்காக குள்ள மாணவனாக வந்த கண்ணனே தாலேலோ! உன்னுடைமைகளான மூவுலகங்களையும் பெற்ற மகிழ்ச்சியில் திரிவிக்கிரமனாக வளர்ந்து உலகங்களை எல்லாம் அளந்தவனே தாலேலோ!

மேலும் ஒரு தாலாட்டுப் பாட்டு.

என் தம்பிரானார் எழில் திருமார்வர்க்கு
சந்தம் அழகிய தாமரைத் தாளர்க்கு
இந்திரன் தானும் எழிலுடைக் கிண்கிணி
தந்துவனாய் நின்றான் தாலேலோ
தாமரைக்கண்ணனே தாலேலோ

(3 ஆம் திருமொழி - பாடல் 46)

என் தலைவனான அழகிய திருமார்பை உடைய, மணமும் விரிவும் நிறமும் அழகிய தாமரையைப் போல் உள்ள திருவடிகளை உடைய உனக்கு மூவுலகங்களுக்கும் தலைவனான இந்திரனும் அழகினை நிலையாக உடைய கிண்கிணியைத் தந்து உன் பெருமையை எண்ணி விலகி நிற்காமலும் உன் எளிமையை எண்ணி அணுகி நிற்காமலும் தகுந்த தொலைவில் உவனாக நின்றான் தாலேலோ! தாமரைக் கண்ணனே தாலேலோ!


அவன் என்று சுட்டும் படி விலகி நிற்கவில்லை. இவன் என்று சுட்டும் படி அணுகி நிற்கவில்லை. உவன் என்று சுட்டும்படி தனக்குத் தகுந்த தொலைவில் இந்திரன் நின்றான்.

ஆணிப்பொன் - மதிப்பில் உயர்ந்த பொன் தூய பொன் மாற்றுப்பொன் (பொன்னின் தரத்தை மதிப்பிடப் பயன்படும் ஒப்பீட்டுப் பொன்)

இந்தப் பாடலை பி. உன்னிகிருஷ்னன் நீலாம்புரி இராகத்தில் பாடியிருக்கிறார். கீழேயுள்ள முகவரியில் கேட்டு மகிழுங்கள்.

http://punnikrishnan-priya-sisters.blogspot.ca/2012/09/manickam-katti-vayiram-idaikatti.html (வளரும்)●










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

# உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்





- மரண அறிவித்தல்கள்
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM

**HEAVEN CARES**

ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY
www.maranam.com, E-Mail: info@maranam.com

Working With

*Chapel Ridge*
FUNERAL HOME INC.

PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS
8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: **Vilosan Sivatharman** B.Eng
Funeral Counsellor
**416-431-3600** Ext:1

Call: **Christeen Seevaratnam**
Funeral Counsellor
**416-431-3600** Ext:2






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..

On high with your thoughts

PRO MAR Ltd.

- Corporate Awards
- Promotional Products
- Laser Engraving
- Pad Printing
- Silk Screening

*Vivek Subra*
Director
B:416- 291 2344
D:416- 898 4846
promarawards@gmail.com

www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

Put your logo on anything!
One stop for all your promotional needs.
PRO MAR Ltd.
416 898 4846
vivekpromar@gmail.com

வாங்குவதும் விற்பதும் சுலபமே ஆனால்..
தெளிவான தெரிவே உங்கள் வெற்றிப்படி.

## *Why think so long...?*

- Free market evaluation
- Professional advice on selling your home for more
- State of the art marketing idea
- Flexible commission
- Friendly service producing excellent results
- List through me to have your property sold in a few days

Mortgages & loans arrangements

Vivek Subramaniam
Sales Representative
416- 898 4846

**Homelife/Future**
Realty inc. Brokerage
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated





# கோவில் மாலைகள் மற்றும் பூஜை பொருட்கள்

**5633 Finch Ave East, Unit # 6, Scarborough, ON M1B 5K9**
**(416) 288-1419**

சொரி பூக்கள், சரம் மற்றும் பூஜைக்கு தேவைப்படும் இலை வகைகள்

| | | | |
|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட கதம்ப சரம் | $ 2.00/ M | அறுகம் புல் | $ 3.00/bag |
| உள்ளூர் கார்னேஷன் சரம் | $ 2.00/M | வில்வம் இலை | $ 3.00/bag |
| மல்லிகைப்பூச்சரம் | $ 5.00/M | வேப்பிலை | $ 3.00/bag |
| கார்னேஷன் மலர்கள் | $ 0.20 each | Marukhalundu /Maru | $ 3.00 /bag |
| மல்லிகை மலர்கள் | $ 5.00/bag | மாவிலை | 10 per $ 1.00 |
| சம்பாகினி மலர்கள் | $ 3.00 /bag | வெற்றிலை | 10 per $ 1.00 |
| அரலி மலர்கள் | $ 3.00 /bag | வாழை இலை | $ 1.00 each |
| தாமரை மலர்கள் | $ 1.00 each | துளசி இலை | $ 3.00/bag |

Fancy Florist




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். கணேஷ்

# 100 மீட்டர் தூரத்தை 10 விநாடிக்குள் கடந்தார் சாம்பியன் உசேன் போல்

போலந்து நாட்டில் வார்சா நகரில் காமிலா ஸ்கோலிமாவ்ஸ்கா நினைவு தடகளப்போட்டிகள் நடந்து வருகிறது. இதில், நடந்த 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் ஒலிம்பிக் பதக்கத்தை 6 முறை வென்றவரான ஜமைக்காவின் உசேன் போல்ட், இந்த சீசனில் முதல் முறையாக 10 விநாடிக்குள் பந்தய தூரத்தைக் கடந்து முதலிடம் பிடித்தார். மூடப்பட்ட அரங்கில் நடந்த போட்டியில் அவர் அதிவேகமாக ஓடி 9.98 விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்தார். போலந்து நாட்டில் நடைபெற்ற பந்தயமொன்றில் முதல் முறையாகப் பங்கேற்ற போல்ட், வரும் வியாழக்கிழமை ஜூரிச்சில் துவங்கும் டயமண்ட் லீக் போட்டிக்கு தயாராகும் விதத்தில் இந்தப் போட்டியில் பங்கேற்றார்.

1996ம் ஆண்டு நமிபிய வீரர் பிராங்கே பிரெடரிக்ஸ் அதிகாரபூர்வமற்ற உள்ளரங்கு போட்டியில் 10.05 விநாடிகளில் 100 மீட்டர் தூரத்தைக் கடந்திருந்தார். அந்தச் சாதனையை வார்சாவில் நடந்த போட்டியில் உசேன் போல்ட் முறியடித்தார். இந்தப் போட்டியில் அவரது சக நாட்டவரான ஷெல்டன் மிட்சேல் 10.33 விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து இரண்டாம் இடம் பிடித்தார்.

ஐ.சி.சி டெஸ்ட் தரப்படுத்தல் (ICC Test) இங்கிலாந்து - இந்தியா மற்றும் இலங்கை-பாகிஸ்தான் டெஸ்ட் தொடர்கள் முடிவடைந்த நிலையில், சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) புதிய தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது.

புதிய தரப்படுத்தலின்படி தென் ஆப்ரிக்கா அணி முதலிடத்திலும், அவுஸ்திரேலிய அணி இரண்டாமிடத்திலும், இங்கிலாந்து அணி மூன்றாமிடத்திலும் உள்ளன.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தோல்வி அடைந்த இந்திய அணி 6 புள்ளிகளை இழந்து நான்காவது இடத்திலிருந்து ஐந்தாவது இடத்திற்கு பின்னடைந்துள்ளது.

இந்தியாவுக்கு எதிரான தொடரை கைப்பற்றி அசத்திய இங்கிலாந்து அணி இரண்டு இடம் முன்னேறி மூன்றாமிடத்திற்கு முன்னேறியுள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிரான தொடரை 2-0 என்ற கணக்கில் தன்வசப்படுத்திய இலங்கை அணி ஐந்தாமிடத்திலிருந்து நான்காமிடத்திற்கு முன்னேறியுள்ளது.

இலங்கையிடம் படுதோல்வி அடைந்த பாகிஸ்தான் அணி 7 புள்ளிகளை இழந்த நிலையில் மூன்றாமிடத்திருந்து ஏழாமிடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் தலா 96 புள்ளிகள் பெற்ற போதிலும் மயிரிழையில் இந்தியா பாகிஸ்தானை விட முன்னிலையில் இருக்கிறது.

நெய்மர், மெஸ்ஸியுடன் கைகோர்க்கும் சுவாரஸ்!!!

லிவர்பூல் அணிக்கு விளையாடி வந்த உருகுவே வீரர் சுவாரஸ் தற்போது பார்சிலொனா அணியில் இணைந்துள்ளார். உலகக்கிண்ண வெளியேற்றத்திற்கு பின் பார்சிலோனாவில் நடக்கும் உள்ளூர் போட்டியில் உருகுவே வீரர் லூயிஸ் சுவாரஸ் மற்றும் பிரேசில் நட்சத்திர வீரர் நெய்மர் ஆகியோர் களமிறங்கினர்.

உலகக்கிண்ண போட்டியில் லூயிஸ் சுவாரஸ் இத்தாலி வீரர் ஜியார்ஜியோ செலினியை தோள்பட்டையில் கடித்தற்காக அவருக்கு 4 மாதம் தடை விதிக்கப்பட்டது.

அதேபோல் நெய்மர் கடந்த யூலை 4 ஆம் திகதி ஏற்பட்ட காயத்திற்கு பிறகு எந்த போட்டியிலும் விளையாடவில்லை.

இந்நிலையில் இதுவரை லிவர்பூல் அணிக்கு விளையாடி வந்த சுவாரஸ் தற்போது பார்சிலொனா அணிக்காக விளையாடுகிறார்.

புதிய அணிக்கு வருகை தந்த சுவாரஸ் மற்றும் நெய்மருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.●

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

JRB Universal Inc.
Almost All Services Available

647 289 6164



R.R. Rajkumar
B.Com (Hons), M.B.A.

Scholarship Plan [RESP]
Any Referral Service

• Credit Counseling • Accounting & Tax Services •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# வளமார்ந்த வாழ்க்கைக்கு உளமார்ந்த அறிவுரைகள்

மனிதர்கள் பகுத்தறிவு நிறைந்தவர்கள். பகுத்தறிவில் விலங்குகள் ஐயறிவு உடையன. விலங்கும் மாக்களும் ஐயறிவு உடையன. மாவும் மாக்களும் ஐயறிவினவே தொல்காப்பியம். பகுத்தறிவுப் பண்ணையில் வளர்ந்தவர்கள் யாம். எனவே உயர்ந்த பிறவி மானுடம். மானிடம் வென்றதெடா எனப் பாடியவர் கம்பநாடன். மானிடம் வென்றது. கம்பாடனும் அதை வழிமொழிந்தான். எனவே உயர் பிறவி மனிதம். எனவே உயரியது. அப்பர் தொட்டு ஔவை வரை போற்றிப் புகழ்ந்தது மானுடத்தை. எனவே உயர்பிறப்பு மனிதம். இந்த மானிடத்தைப் பாடியது சைவமும் தமிழும். முழுதும் உண்மை. இதற்கு உதவியாய் சான்றாய் இருந்தது கடவுட் பாவில் இருந்து ஔவை பாடிய செய்யுட்கள் வரை ஒட்டுமொத்தமாகவே பகுத்தறிவு வாதம் உருவாக்கிய உத்தம தமிழ்வாதம்வரை நோட்டம் போடுங்கள் உண்மை புரியும். ஏன்? அப்பர் சுவாமிகள் அருளிப் போந்த"மனத்தம்பிறவியும் வேண்டுவதே என்ற பாடல் சான்றாகும் மனிதம் உயர்த்தப்பட்டது. தோழ் கொழுத்தும் அதுவே இதற்குச் சான்றுள். திருமுறையில் நிறைந்துள்ளன.

ஒற்றைகளை ஒற்றை புரட்டிப்பார்ப்பின் புரியும். எல்லாவற்றும் மேலாக நீதிநூற்பாடல்களைப் பாருங்கள். விடை பகர்கிறது. மெய்கண்ட சாத்திரம் என்ன பகர்கிறது. மெய்கண்ட சாத்திரங்கள் என்ன? தமிழா, வடமொழியா? பகுத்தறிவு தந்ததே நீதிநூற் கொத்துக்கள். உயரியவை அவ்வையில் இருந்து ஆண்டாள் அருளியவை யாவும் ஔவையாரில் இருந்து அதிவீரராமபாண்டியன் பாடிய அத்தனையும் எம்மை ஆளாக்கியவையே.

எனவே உயர்பிறப்பு, பகுத்தறிவும் பாசறைகளே. அறநூல்கள் பல வடமொழியில் இருந்து தென்மொழிக்கு வந்தவையே. பெருங்காப்பியம், சிறுகாப்பியம் எல்லாமே அறவுரைகள்தானே. இப்பார்வையிலே மனித கதை இன்றும் உய்தி அளிக்கும் நீதி நூற்பனுவல்களை உரையுங்கள் உய்தியடையுங்கள். இப்பார்வையிலே எம்மை வாழ வைத்த, நீதி சைவ நீதிதானே? அரிச்சந்திரன் கதை தொட்டு அறநெறிச்சாரம்வரை நம் கருவூலமாயத் திகழ்வன நீதிநூற் தொகுப்புகளே!

இவ்வற நூல்கள் மிக இன்றியமையாதன. பாரதி தொட்டு, பாரதிதாசன்வரை நீதி எடுத்து ஆளப்பட்டமை, வெள்ளிடைமலையாம். பாதிரிமார்கள்கூட இவ்வுத்தியைப் பயன்படுத்தினர். நளவெண்பாவிலே சூதாட்டம் பேசப்படுகிறது அல்லவா? கூட்டுமொத்தம் தமிழறிவே தகைமை சான்று அறிவு (தான்).

எனவே பொன்பொழியும் வாழ்வு ஒளிமயமானது. தாய்த் தமிழாற்றான் குழந்தை தன் வளர்ப்பு நீதி வழுவா நெறிமுறையாற்றான். ஆக வளமார்ந்த வாழ்விற்கு நீதிநெறி வளம் ஊட்டியது உண்மை. பாரதியும் கூடப் புதிய ஆத்திசூடி பாடினார். கூட்டுமொத்தமாகத் தமிழும் நீதியும் எமக்கு இரு கண்கள்.
உ+ம்: எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்.

நன்றே செயற்படுவோம். இன்றே செயற்படுவோம்.

நன்றே செய்வம், இன்றே செய்வோம்
நலமே வாழ்வோம். சேரவாரும் ஜெகத்
தீரே. வாழ்வு வளம் பெறட்டும். எனவே
எம் சிறுவர் குழாத்தின் நலமே னி நம் கட்டுமானம்
குழந்தைகளை உன்னி இயன்ற இயக்கமே
நீதிநூல்கள். சைவசித்தாந்தக் கழகம்
அறநெறிக் கோவையே வெளியிட்டது
இப்பாணியிலே, குமரகுருபரர் தந்த
14 நீதிச் செய்யுட் தொகுப்பே நீதிநெறிவிளக்கம். 101. செய்யுட் கோவை இது. கடவுட் தோத்திரம் இதுதான்.

நீரில்குமிழி இளமை நிறை செல்வம்
நீரில் சுருட்டும் நெடுந்திரைகள் - நீரில்
எழுத்தாகும். யாக்கை நமரங்கான் என்னே
வழுத்தாதது எம்பிரான் மன்று. (1)

தெளிவுரை: மானிடரின் இளமைப் பருவமானது நீரிடைத் தோன்றும் குமுழியாகும். மக்கள் அரிதிற் தேடி ஈட்டும் செல்வம், காற்றிலே நீரினால் சுருட்டப்படும் பெரிய அலைகளாகும். உடலானது நீரிலே எழுதப்படும் எழுத்தாகும். இவை இவ்வாறு விளங்க நம்மவர்களே நம் தில்லைப் பதியான பொன்னம்பலத்திலே உள்ள பெருமானை வணங்காமல் காலத்தைக் கழிப்பது ஏன்?

கருத்து: இளமை, செல்வம், உடல் நிலையற்றவை. எனவே, இவை உள்ளபோதே, இறைவனை வழிபட்டு, உய்தி பெற வேண்டும்.

அடுத்து வருவன கல்வி பற்றியது.

அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
-
புறங்கடை நல்லிசையும் நாட்டும் -
உறுங்கலவொன்று
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின்
ஊங்கில்லை (2)
சிற்றுயிர்க் குற்றதுணை

பொருள்: கல்வியானது, அறம் பொருள் இன்பம் வீடு என்பவற்றை ஒருவனுக்குக் கொடுக்கும். உலகத்திற் குற்றம் இலாத, புகழையும் கொடுக்கும். துன்பம் வந்தால் அதைப் போக்குதற்கு உதவும். எனவே - அதனை நாங்கள் போற்ற வேண்டும் - மக்களுக்குக் கல்வியே பெரிய துணையாம் என்பதைச் சிந்திப்போம் ஆக.

நாகரிகம் பற்றிச் சங்ககாலந் தொட்டு இன்றுவரை போற்றப்படுகிறது. பெயக்கண்டும், நஞ்சுண்டமைவர் என்பது சங்ககால வாக்கு. அதை இப்போ மாற்றிப் பிழையாகப் பாவிக்கிறார்கள். 'நாகரிகம்' என்பதை நீட்டி நாகரீகம் என எழுதுகின்றனர்.

செயக் கடவ அவ்வளவும்
செய்துமன் என்பார்
நயத்தகு நாகரிகம் என்னாம் -
செயிர்த்துரைப்பின்
நெஞ்சுநோம் என்று தலைதுமிப்பான்
தண்ணளிபோல்
எஞ்சாது எடுத்துரைக்கற் பாற்று (7)

தாம் செய்யக் கூடாதவற்றையும் செய்து முடிப்போம் எனச் சொல்பவரின் நாகரிகம் என்ன பயன் அளிக்கும் அத்தகைய செயல், சினந்து சொன்னான் மனம் வருந்தும் என்று தலையையே வெட்டி விடுகின்ற கருணை யைப் போன்றது என்று கூசாமல் எடுத்துக் கூறும் தன்மை கொண்டதாகும்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# R & S AUTO SALES

Top Quality Used Car Dealer

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட

வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

**36 வருட அனுபவம்**



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற

Radha

**R & S Auto Sales Inc.**
**Radha Motor Inc.**

3030 Markham Road
Scarborough, ON

**416-412-3838**
**416-836-5825**




எஸ். காந்தி

# வெள்ளிப் பணம்

88

வெள்ளிப்பணத் தொடரில் இந்த இதழில் அடுத்த வருடம் கோடைகாலப் பகுதியில் ரொறன்ரோவில் நடைபெறவிருக்கும் Pan Am என்கின்ற விளையாட்டுப் போட்டியும், அதன்மூலம் பெறப்போகும் பொருளாதார நலன்கள் மற்றும் அதனைச் சார்ந்த பொருளாதார நலன்கள் பற்றிய ஒரு பார்வையாக அமைகின்றது.

முதலாவது Pan Am விளையாட்டு என்பது, வட தென் மத்திய அமெரிக்க நாடுகளின் விளையாட்டு வீரர்கள் பங்குகொள்ளும் ஒரு விளையாட்டு நிகழ்வாகும். இதேபோன்று இந்த நாடுகளைச் சேர்ந்த ஏதாவது உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்டவர்கள் விளையாடும் விளையாட்டுப் போட்டிக்கு Parapan Am என்ற பெயரிட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்த இரண்டு நிகழ்வும் 2015ஆம் ஆண்டு யூலை, ஆகஸ்ட் மாதங்களில் நடைபெற இருக்கின்றன. இதில் Pan Am விளையாட்டுப் போட்டி யூலை 10ஆந் திகதியிலிருந்து 26ஆந் திகதி வரையிலும், Parapan Am என்ற விளையாட்டுப் போட்டி ஆகஸ்ட் 7ஆந் திகதியிலிருந்து 14ஆந் திகதிவரையிலும் நடைபெறவிருக்கின்றது.

இந்த நிகழ்வில் ஏறத்தாழ 41 நாடுகளில் இருந்து 7600 இல் இருந்து 10,000 வரையிலான விளையாட்டு வீரர்கள் பங்குகொள்ள இருக்கின்றனர். இதில் 48 வகைக்கு மேற்பட்ட விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறப் போகின்றது. இது ரொறன்ரோ உட்பட ஒன்ராறியோவில் உள்ள 17 நகர சபை உள்ள இடங்களில் இடம்பெறப் போகின்றது.

இதற்காக பல்வேறு விளையாட்டு அரங்கங்கள், பாதைகளை அழகுபடுத்துதல் நடைபெறுவதும் நாம் நாளடைவில் காண்கின்றோம். இதற்காக ஏறத்தாழ 1.5 பில்லியன் டாலர் பணம் 3 வகையான அரச கட்டமைப்புகளிடம் இருந்து வழங்கப்படுகின்றன. அக்கட்டமைப்புகளாவன நகரசபை, மாகாண அரசு, மத்திய அரசாங்கம் என்பனவாகும்.

இதன் மூலமான பொருளாதார நலன்கள் என்கின்ற நோக்கில் பார்க்கின்றபோது முதலாவதாக விளையாட்டுத்துறை சார்ந்த உல்லாசப் பயணத்துறை அடுத்த வருடம் பெரும் வருவாயை ஏற்படுத்திக் கொடுப்பதோடு, அது சார்ந்து நிற்கும் சகல துறைகளும் பெருமளவு பொருளாதார நன்மைகளைப் பெறுவதுடன் வேலைவாய்ப்புக்களும் அதிகரிக்கும் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

ஏறத்தாழ இந்த நிகழ்வுகளைப் பார்ப்பதற்காக 350,000 பேர்வரை வருவார்கள் என்பது எதிர்பார்ப்பாக உள்ளது. அது மாத்திரமல்ல ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள 15 நகர சபை பகுதிகளில் 29,000 வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படும் என்கின்ற எதிர்பார்ப்பும் உண்டு.

இது மாத்திரமல்ல, கனடிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 260 மில்லியன் டாலர் வளர்ச்சியையும் இது உறுதிப்படுத்தும் எனச் சொல்லப்படுகின்றது.

இத்துடன் இங்கு வரும் விளையாட்டு வீரர்கள் தங்குவதற்கும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தங்குவதற்கும் என ரொறன்ரோவில் உள்ள WEST DON LAND பகுதியில் 80 ஏக்கர் நிலப்பரப்பில் 10,000 அலகுகளைக் கொண்ட அடுக்கு மாடிக்கட்டிடங்களும், பூங்கா வசதிகளும் கொண்ட கட்டுமானப் பணிகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனை "Pan Am Game Athletes Village எனப் பெயர் சூட்டப்படும்.

இந்த நிகழ்வுகள் முடிந்த பின்னர் இது இப்பகுதி வருமானம் குறைந்த மக்கள் வாழ்வதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ஒரு திட்டமாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது. இதன்மூலம் தொடர்மாடிக் கட்டிடங்களின் விலைகள் குறைவதற்கான சாத்தியங்களும் உண்டு.

தூரநோக்குப் பார்வையில் இது பெரும் நன்மையைக் கொடுக்காது என்கின்ற விடயத்தினைக் குறிப்பிடுபவர்களும் உண்டு. ஏறத்தாழ 2.5 பில்லியன் பணம் வரி செலுத்துபவர்களின் பணம். ரொறன்ரோ, ஹமில்ரன், மில்ரன், ஏஜக்ஸ், ஒஸாவா, உட்பட 17 நகரங்களுக்குக் கட்டுமானப் பணிகளுக்குச் செலவு செய்யப்படுவதாக ஒரு புள்ளி விபரம் கூறுகின்றது. நிகழ்வுகள் முடிந்த பின்னர் இதனைப் பராமரிப்பதற்கு பெருமளவு நிதி தேவைப்படும். அப்பொழுது மத்திய, மாகாண அரசுகள் நகர சபைக்கு உதவிகள் புரியாத நிலையில் இது ஒரு பெரும் சவாலாக அமையலாம் எனக் கூறப்படுகிறது.

எதுவாயினும், 2015ஆம் ஆண்டு கோடைகாலம் இப்பகுதியில் வாழ்பவர்களுக்கு சற்று வேறுபட்ட அனுபவத்தைக் கொடுக்கும் என எதிர்பார்க்கலாம்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Heritage Education Funds

**RESP SAVINGS PLAN**

**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM


**INCOME TAX PREPARATION**

Personal Income Tax

Small Business Income Tax

Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

**416. 841. 1866**
**416. 955. 9303**
E.mail: ganthiy@rogers.com


## ஐ.நா.மனித உரிமை புதிய ஆணையாளர் ஸையத் அல் ஹுசேன்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் புதிய ஆணையாளராக ஜோர்தான் நாட்டின் இளவரசர் ஸையத் அல் ஹுசேன் இந்த மாதம் முதலாம் திகதி பதவியேற்றார்.

## Educational achievement by two Tamil girls in Canada


This year, two Tamil students scored highest average in the Toronto high school exams and made every Tamil proud of it.

From year to year, students who complete their study from high school are selected for university. In this list, the Tamil students have created a record by being selected.

The top spot in the list was gained by Nadisa Jeyakanthan with 98.83 percent in Durham school district. Similarly in Toronto Catholic school district, student Meena Subramaniam holds the top spot with an average of 100 percent. It is necessary that more Tamil students should create records in various field of education.


**The Children's Education Trust of Canada**
offered to the public by

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து 7200 டாலர்கள் வரை கனடா அரசாங்கம் வழங்கும் நன்கொடையைப் பெற்று (20 வீத Grant) உங்கள் பிள்ளைகளதும் பேரப்பிள்ளைகளதும் கல்வி வாய்ப்பை ஊக்குவியுங்கள்.

**சமூக நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்ற**

சிவா கணபதிப்பிள்ளை

**அவர்களை அழைத்து விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai
Dealing Representative

**418 899 6044**

email
s.kanapathypillai@cefi.ca




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி பால சிவகடாட்சம்

# தமிழில் காலக்கணிதம்

(கடந்த இதழின் தொடர்ச்சி)

சங்ககாலப்புலவர் ஒருவர் தனது அரசனை"உனது ஒரு நாள் என்பது ஒருமாதமாகட்டும் உனது ஒரு மாதம் ஒரு ஆண்டாகட்டும் உனது ஒரு ஆண்டு ஒரு யுகம் ஆகட்டும் உனக்கு ஒரு யுகம் என்பது ஒரு கல்பம் ஆகட்டும் என்று வாழ்த்தும் பாடல் ஒன்றைப் பதிற்றுப்பத்தில் காண முடிகிறது. ஆயிரம் மகாயுகங்கள் கொண்ட கல்பம் என்பது பிரமனுக்கு ஒருநாள் என்று இந்தியக் காலக்கணிதர் பண்டுதொட்டுக் கூறிவருவதைப் பின்பற்றி எழுந்ததே சங்கப்புலவரின் இந்த வாழ்த்துப்பாடலாகும்.

வண்டார் கூந்தல் ஒண்டொடி கணவ
நின்னாள் திங்கள் அனையவாக
திங்கள்
யாண்டோர் அனைய வாக யாண்டே
ஊழி யனைய வாக வூழி
வெள்ள வரம்பன வாக

இங்கே யுகங்கள் பல கடந்த வெள்ளவரம்பு என்பது ஒரு கல்பம் முடியும்போது உலகில் வாழும் உயிர்கள் அனைத்தும் வெள்ளத்தால் அளிக்கப்படும் என்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதாகலாம். முந்தைய யுகத்தின் முடிவில் பெருவெள்ளத்தால் உலகம் அழிந்தது என்னும் ஒரு கதையை உலகின் பல்வேறு கலாச்சாரங்களும் வலியுறுத்துவதை இங்கு நினைவுகூரலாம்.

சங்ககாலத்திலேயே வானியல் பற்றிய அறிவு நிரம்பப்பெற்ற அறிஞர்கள் பலர் தம் அறிவுபற்றித் தம்பட்டம் அடிக்காமல் அடக்கத்துடன் வாழ்ந்தனர் என்பதை அறியமுடிகிறது.

செஞ்ஞாயிற்றுச் செலவும்
அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்
பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வறிது நிலைஇய காயமும் என்றிவை
சென்று அளந்து அறிந்தோர் போல
என்று இவை
அனைத்தும்
அறி அறிவு ஆகாச் செறிவினை ஆகி
களிறு கவுள் அடுத்த எறிகல் போல
ஒளித்த துப்பினை ஆதலின்

சூரியன்செல்லும்பாதை அச்சூரியனின் இயக்கம் அந்த இயக்கம் சூழ்ந்த மண்டலம் ஒரு ஆதாரமும் இன்றித்தானே நிற்கும் ஆகாயம் என்றுசொல்லப்பட்ட இவை அனைத்தையும் தாமே நேரில் சென்று அளந்து கண்டறிந்ததுபோல் இவை இந்த அளவை உடையன என்று கூறவல்ல அறிஞர்களும் உள்ளனர் என்ற பொருள்தரும் இப்பாடலை புறநானூற்றில் காணமுடியும்.

நாளும் புள்ளும் பிறவற்றி னிமித்தமும் என்ற தொல்காப்பியத்தின் வரும் சூத்திரத்தின் வாயிலாக தொல்காப்பியர் காலத்தில் நட்சத்திரம் பஞ்சபட்சி போன்றவற்றைக் கணிப்பில்கொண்டு நற்பலன் தீயபலன் கூறும் வழக்கம் இருந்ததை அறியமுடியும்.

இரவெல்லாம் விழித்திருந்து வானமண்டலத்தை ஆராய்ந்து கணிக்கும் காலக்கணிதம் பற்றிக்கூறும் குறுந்தொகைப்பாடல் ஒன்றை ஈண்டு நோக்கலாம்.
நள்ளென் யாமத்து ஐயெனகரையும்
அஞ்சுவரு பொழுதினாலும் என்கண்
துஞ்சாவாழி தோழி காவலர்
கணக்கு ஆய்வகையின்

விண்வெளி மண்டலத்தில் சூரியன் சந்திரன் மற்றும் கிரகங்களின் அசைவுகளை அவதானித்துக் காலத்தைக் கணித்துக் கூறும் வல்லுநர்கள் கணியர், நாழிகைக்கணக்கர், காலக்கணிதர் என்றெல்லாம் அழைக்கப்பெற்றனர். காலக்கணிதத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள் பற்றி சிலப்பதிகார ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். "வீழ்குடி உழவரொடு விளங்கிய கொள்கை ஆயுள்வேதரும்" காலக்கணிதரும் கூடி வாழ்ந்தமை பற்றிய குறிப்பினை சிலப்பதிகாரத்தில் காணமுடிகிறது.

ரோமாபுரிக் குடிமகனாகிய தொலமியின் வான்கணிதநூல் குறித்து ஏற்கெனவே பார்த்தோம். இதே தொலமி றெற்றாபிப்லோஸ் (Tetrabiblos) என்னும் புகழ்பெற்ற சோதிடநூல் ஒன்றையும் எழுதிவைத்துள்ளார். விஞ்ஞான அடிப்படையிலான வானியல் நூல்களை ஆக்கிய தொலமி விஞ்ஞான அடிப்படையற்ற சோதிடநூலையும் எழுதியது ஏன் என்ற கேள்வி எவருக்கும் எழலாம். இதற்கு தமது காலக் கணித நூல் விண்வெளிமண்டலத்தில் காணப்படும் கோள்களின் நிலைகளை அறிந்துகொள்ள உதவுகின்றது. அதேசமயம் தமது சோதிடநூல் மேற்படி கிரகங்கள் மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களை விளக்குகின்றது என்று தொலமி விளக்கம் அளித்துள்ளார். தொலமியை ஐரோப்பிய சோதிடக்கலையின் பிதாமகர் கூறிக்கொள்வதில் தவறு இல்லை.

பன்னிரண்டு இராசிமண்டலங்கள் பற்றியும் அவற்றை ஆட்சி செய்யும் கிரகங்கள் பற்றியும் தொலமி விளக்கினார். ஏழு கோள்கள் என்று அறியப்பட்ட சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி என்பவற்றின் சொந்தவீடுகள் பற்றியும் பின்வருமாறு விளக்குகின்றார்.

மண்டலத்தின் 12 ராசிகளுள்ளும் மிக வடக்காகவும் எமக்கு நேர் உச்சியிலும் உள்ளதனால் அதிக வெப்பத்தையும் சூட்டையும் தரும் கர்க்கடகம் சிங்கம் ஆகிய இரு ராசிகளும் பெரிதாகவும் பலமிக்கதாகவும் விளங்கும் சூரியனுக்கும் சந்திரனுக்கும் உரியவீடுகளாகக் கொள்ளப்படுகின்றன. இவற்றுள் ஆண்மைமிக்க சிங்கராசி சூரியனுக்கும் பெண் இராசியாகிய கர்க்கடகம் சந்திரனுக்கும் உரியனவாகக் கொள்ளப்படுகின்றன. இதன் அடிப்படையில் சிங்கத்தில் இருந்து மகரம் வரையிலான அரைவட்டம் சூரியபாகமாகவும், கும்பத்தில் இருந்து கர்க்கடகம் வரையிலான அரைவட்டம் சந்திரபாகமாகவும் அவர்கள் அநுமானித்தார்கள்.
பன்னிரண்டு இராசிகளுள் சந்திரனுக்கும் சூரியனுக்கும் ஒதுக்கப்பட்டது போக மீதிபத்தும் சனி, வியாழன், செவ்வாய், வெள்ளி, புதன் ஆகிய ஐந்து கிரகங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன. சந்திர அரைவட்டத்தில் ஒரு இராசியும் சூரிய அரைவட்டத்தில் ஒரு இராசியுமாக ஒவ்வொரு கிரகமும் இரு வீடுகளுக்கு உரித்தாகின. இவற்றுள் குளிர்கிரகமான சனிக்கு சூரியசந்திரர்களுக்கு எதிர்ப்பக்கமாக சூரிய அரைவட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகரமும் சந்திர அரைவட்டத்தில் மகரமும் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த இரு இராசிகளும் (சுறாவும் கும்பமும்) குளிர்த்தன்மை உடையன என்பது கவனிக்கத்தக்கது. மிதமான குணங்களையுடைய வியாழனுக்கு சனியின் சொந்தவீடுகளுக்கு கீழும் மேலுமாக தனு மீனம் ஆகிய இராசிகள் சொந்தமாகின. அடுத்து வியாழனுக்குக் கீழே உள்ள வரண்ட கிரகமான செவ்வாய்க்கு வியாழனின் வீடுகளான தனுவுக்கும் மீனத்துக்கும் பக்கத்து இராசிகளான விருச்சிகமும் மேடமும் சொந்தவீடுகள் ஆகின்றன. செவ்வாய்க்குக் கீழே உள்ள வெப்பமும் குளிரும் மிக அதிகமில்லாத சுக்கிரனுக்கு வளமிகுந்த இராசிகளான துலாமும் இடபமும் சொந்த வீடுகளாகின்றன. சுக்கிரனின் இந்த வீடுகள் சூரியனின் இருபக்கத்திலும் இரண்டு இராசிகளுக்கு அப்பால் நிலைகொண்டிருக்கவில்லை என்பதைக்கவனிக்கவும். எப்பொழுதும் சூரியனுக்கு நெருக்கமாகக் காணப்படும் புதன் கிரகத்துக்கு எஞ்சிய இரு இராசிகளான கன்னியும் மிதுனமும் சொந்தவீடுகளாகின்றன. இந்த இரு இராசிகளும் ஒளிக்கிரகங்களான சூரியன் சந்திரன் ஆகியோரின் சொந்தவீடுகளான சிங்கத்துக்கும் கர்க்கடகத்துக்கும் அருகருகே உள்ளன என்பதையும் கவனிக்கவேண்டும்."

இராசிகளின் சொந்தவீடுகள் பற்றி இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன்னர் தொலமி எழுதிவைத்திருப்பதற்கும் சங்ககாலம் தொட்டு இன்றுவரை தமிழர் உள்ளிட்ட இந்திய சோதிடர்கள் கூறிவருவதற்கும் எள்ளளவும் வேறுபாடு இல்லை என்பது மிக மிக முக்கியமானதொருவிடயமாகும். பரிபாடலில் இடம்பெற்றுள்ள நல்லந்துவனார் என்னும் புலவரின் பாடலை இங்கு நோக்குவோம். வைகை ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தோடி வருவதற்குக் காரணமான மலையில் பெய்யும் பெருமழைக்கும் கோள்களின் நிலைக்கும் உள்ள தொடர்பை விளக்குகின்றது இப்பாடல்.

விரிகதிர் மதியமொடு வியல் விசும்பு புணர்ப்ப
எரிசடை எழில்வேழம் தலை எனக் கீழ் இருந்து
தெருவிடப்படுத்த மூன்று ஒன்பதின் இருக்கையுள்
வருடையைப் படிமகன் வாய்ப்பப் பொருள்தெரி
புந்தி மிதுனம் பொருந்தப் புலர்விடியல்
அங்கி உயர்நிற்ப வந்தனன் பங்குவின்
இல்லத்துணைக்குப்பால் எய்த இறைமகன்
வில்லில்கடை மகர மேவப் பாம்பு ஒல்லை
மதி மறைய வருநாளில் வாய்ந்த
பொதியின் முனிவன் புரைவரைக் கீறி
மிதுனம் அடைய விரிகதிர்வேனில்
எதிர்வரவு மாரி இயைகெனைவ் வாற்றால்
புரைகெழு சையம் பொழிமழை தாழ
நெரிதரும் வையைப் புனல்

சூரியனும் சந்திரனும் விரிந்த ஆகாயமும் இணைந்த பெருவீதியில் கார்த்திகை (எரிசடை) பரணி (வேழம்) அசுவினி (தலை) எனக் கீழிருந்து மேலாகவரும் 27 நட்சத்திரமண்டலங்களின் இருக்கையுள் வெள்ளி இடபத்தில் செவ்வாய் மேடத்தில் புதன் மீனத்தில் எனத் தத்தமது சொந்தவீடுகளில் நிற்க விடியல் பொழுதில் கார்த்திகை நட்சத்திரம் உச்சத்தில் நிற்க வியாழன் சனியின் இரண்டு வீடுகளுக்கும் இருபக்கமும் உள்ள தனு மீனம் ஆகிய தனது வீடுகளில் நிற்க சனி தனு ராசியை அடுத்துவரும் தன் சொந்தவீடாகிய மகரத்தில் நிற்க இராகு என்னும் இருளில் சந்திரன் மறைய வரும் நாளில் அகஸ்தியநட்சத்திரம் மிதுனராசியை அடைய முதுவேனில்காலம் வரவுகூறும் கார்காலத்து மழைபொழியப் பெருக்கெடுத்துவரும் வைகை ஆற்று வெள்ளத்தை பாடுகிறார் இப்புலவர்.

தொலமி வாழ்ந்த காலப்பகுதியான இரண்டாம்நூற்றாண்டில் தமிழகத்துக்கும் ரோமுக்கும் இடையே நிலவிய வணிகத்தொடர்புக்குச் சான்றாக ஏராளமான இலக்கியச்சான்றுகளும் தொல்லியல் சான்றுகளும் உள்ளன. இத்தகைய பின்னணியில் காலக்கணிதம் தொடர்பான அறிவுப்பரிமாற்றம் இருநாடுகளுக்கும் இடையில் நடைபெற்றிருத்தல்கூடும் என்பதை மறுப்பதற்கில்லை.

இந்தியாவின் தலைசிறந்த வானியல் நிபுணராக உலகமுழுதும் அறியப்பட்டவர் ஆரியபட்டர். நட்சத்திரங்களினதும் கிரகங்களினதும் நிலைகளை அடிப்படையாகக் கொண்டு கலியுகத்தின் ஆரம்பத்தை நிர்ணயித்தவர் ஆரியபட்டரேயாவர்.

ஆரியபட்டரின் கணிப்பின்படி கலியுகத்தின் முதலாவது தினம் தற்போது நடைமுறையில் உள்ள கலண்டரின்படி கி.மு.3101 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17/18 ஆம் திகதி வியாழக்கிழமை/வெள்ளிக்கிழமையாகும். இதுவே யுகாதி (யுகத்தின் ஆரம்பம்) என்று அறியப்படும். கன்னடரும் தெலுங்கரும் புதுவருடப்பிறப்பை யுகாதி என்றே இன்றும் குறிப்பிடுவது மனங்கொளத்தக்கது. ஆரியபட்டருக்குமுன்னர் கலிவருடத்தை எவரும் பயன்படுத்தியதில்லை.

பூமி தன்னைதானே சுற்றுவதன் காரணமாகவே வானமண்டலத்தில் அசையாநிலையில் உள்ள நட்சத்திரங்கள் பூமியின் சுழற்சிக்கு எதிர்த்திசையில் நகர்வதுபோல் எமக்குத் தெரிகின்றன என்பதை முதன்முதலில் விளக்கிய இந்தியவானியல் வல்லுநர் ஆரியபட்டராவர். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆரியபட்டரின் காலக்கணித நூல்கள் பிற்காலத்தவரால் பெரிதும் போற்றப்பட்டன. இவற்றுள் கி.பி. 499இல் ஆக்கம்பெற்ற ஆரியபட்டீயம் இன்றும் எமக்குக் கிடைக்கக் கூடியதாக உள்ளது.

கணிதத்தில் எண்களுக்குப் பதிலாக உயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் பயன்படுத்தும் முறையை அறிமுகப்படுத்தியவர் ஆரியபட்டர்.

இவரது கணிதமுறையில் காலத்துக்கேற்ற அவசிமான திருத்தங்களைச் செய்ததோடு கணிதத்தை மேலும் இலகுவாக்கும் வாக்கிய முறையை அறிமுகப்படுத்தியவர் சேரநாட்டவரான ஹரிதத்தர். இவரது பரகிதம் என்னும் பஞ்சாங்கக்கணிப்புமுறை கி.பி. 683இல் திரு நவாய என்னும் கோவில் மகாமகத்தன்று அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும் வாக்கியகணிதத்தை அறிமுகப்படுத்தியவர் சேரநாட்டைச்சேர்ந்தவரும் கி.பி. 4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவருமான வரருசியே என்பாரும் உளர். சூரியனதும் சந்திரனது நிலைகளைக்கணிக்க உதவும் சந்திரவாக்கியம் என்னும் நூலின் ஆசிரியராக இவர் அறியப்படுகின்றார்.

ஹரிதத்தர் அறிமுகப்படுத்திய பரகிதம் என்னும் பஞ்சாங்கக்கணிப்பு முறையை ஆதாரமாகக் கொண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர் கி.பி.1283 இல் வாக்கிய கரணம் என்னும் வாக்கிய பஞ்சாங்கக்கணிதநூலை எழுதினார். இவரது இயற்பெயர் தெரியவில்லை. சேரநாட்டைசேர்ந்த பழம்பெரும் காலக்கணிதரான வரருசி என்பாரை இவர் மும்முறை மேற்கோள் காட்டுவதால் இவரது நூலான வாக்கியகரணமும் வரருசியின் நூலாகவே கொள்ளப்படுகிறது. இதுவே இன்று தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் உள்ள பஞ்சாங்கம் கணிப்போரால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2014 ஆகஸ்ட் நான்கு ஒரு முக்கியமான நாள்

அ. முத்துலிங்கம்

இணையத்தில் ஒருநாள் சங்கப் பாடல் ஒன்றைத் தேடியபோது அதன் அருமையான ஆங்கில மொழிபெயர்ப்பு தற்செயலாக கிடைத்தது. அதன் நேர்த்தியும் அழகும் என்னை பெரிதும் கவர்ந்தன. மொழிபெயர்த்தவர் பெயர் வைதேகி ஹெர்பர்ட். ஹவாயில் வசிக்கும் இந்திய அமெரிக்கப் பெண்மணி. கடந்த பல வருடங்களாக இவர் முழுநேரப் பணியாக சங்கப்பாடல்களை மொழிபெயர்த்து வருகிறார் என்பதை அறிந்தபோது ஆச்சரியம் ஏற்பட்டது. ஒரு பல்கலைக் கழகம் செய்யவேண்டிய பணியை, தனி ஒருவராக இவர் செய்துகொண்டிருந்தார்.

2014ம் ஆண்டு ஆகஸ்டு 4ம் தேதி தமிழுக்கு முக்கியமானது. அன்றுதான் வைதேகி கடந்த நாலு வருடங்களாக செய்துவந்த பணி முடிவுக்கு வந்தது. எட்டுத் தொகை, பத்துப்பாட்டு ஆகிய 18 சங்க நூல்களும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுவிட்டன. முழுப்பாடலின் பொருளை முதலில் ஆங்கிலத்தில் கொடுத்துவிட்டு பின்னர் வார்த்தைக்கு வார்த்தை பொருள் தந்து மொழிபெயர்ப்பை முழுமையாக்கியிருக்கிறார் வைதேகி. கடந்த 2000 வருடங்களில் சங்க இலக்கியம் முழுத்தொகுப்பும் தனியொருவரால் ஆங்கிலத்தில் உரை எழுதப்பட்டு அச்சில் வருவது இதுவே முதல்தடவை.


சங்க இலக்கியம் என்ற பெரும் சொத்து எங்களிடம் 2000 வருடமாக இருக்கிறது. இப்பொழுது 18 நூல்களும் எளிமையான ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு முழுத்தொகுப்பாக வந்திருக்கிறது. ஆங்கிலம் மட்டுமே தெரிந்த இளம் தலைமுறையினருக்கும் நிச்சயம் பயனுள்ளதாக இருக்கும். முழுத் தொகுப்பும் குறைந்த விலையில் கிடைக்கவும் வழிசெய்திருக்கிறார்கள். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

Digital Maxim
1737, Chatham Drive, Troy, MI 48084. USA.
Tel 1 248 824 9555






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585


# FREE ! Real Estate Classes




## Successful Real Estate Office With Over 300 Salespeople

TOP 5 HOMELIFE OFFICE IN CANADA 2012

TOP 6 HOMELIFE OFFICE IN CANADA 2011

TOP 7 HOMELIFE OFFICE IN CANADA 2010

★No Franchise Fees ★No Monthly Fees ★No Desk Fees

## International Award Winning Office

### Top 5th HomeLife Office In Canada-2012

- Atractive Commission Split.
- Over 300 Salespersons.
- Daily Training, Full Services Office
- 24 Hrs Access to the Office
- Office Open 7 Days/ Week

HOMELIFE HIGHER STANDARDS



**HOMELIFE /FUTURE REALTY INC.,** Brokerage
205 -7 Eastvale Dr., Markham, Ontario, L3S 4N7
Bus: 905.201.9977 | 416.264.0101

*Based on TREB data: 2012. (does not include independent or other franchisors). ©2012 HomeLife Realty Services Inc. All Rights Reserved.Each Office is Independently Owned and Operated. Not intended to solicit Agents or Brokers currently under contract.

*INDEPENDENTLY OWNED AND OPERATED*

**Selva Vettyvel**
*Broker of Record*
Tel:416-568-4301


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org